بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 37 & 38

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1448 - ரபீயுல் அவ்வல் 27 - 05 ரபீயுல் ஆகிர்

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - அகா 10 - 17 ★ 10 -17 செப்டம்பர் 2026

## அல்லாஹ்வின் கட்டளை

فَسَبِّحۡ بِحَمۡدِ رَبِّکَ وَکُنۡ مِّنَ السّٰجِدِیۡنَ ﴿۹۹﴾ وَاعۡبُدۡ رَبَّکَ حَتّٰی یَاۡتِیَکَ الۡیَقِیۡنُ ﴿۱۰۰﴾

பொருள்: எனவே நீர் உம்முடைய இறைவனைப் புகழ்ந்து (அவனது) தூய்மையை எடுத்துரைப்பீராக! (மேலும் அவனுக்கு) சிரம்பணிவோருடன் சேர்ந்து விடுவீராக!

உமக்கு மரண (நேர)ம் வரும் வரை உம்முடைய இறைவனை வணங்கிக் கொண்டேயிருப்பீராக! (அல் ஹிஜ்ர்: 99-100)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி

## துஆ நிச்சயமாக ஒப்புக் கொள்ளப்படும் என்ற உறுதியுடன் நீங்கள் அல்லாஹ்விடம் வேண்டுங்கள்

عَنۡ أَبِي هُرَيۡرَةَ قَالَ: قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيۡهِ وَسَلَّمَ: "ادۡعُوا اللّٰهَ وَأَنۡتُمۡ مُوقِنُونَ بِالۡإِجَابَةِ، وَاعۡلَمُوا أَنَّ اللّٰهَ لَا يَسۡتَجِيبُ دُعَاءً مِنۡ قَلۡبٍ غَافِلٍ لَاهٍ"

[سنن ترمذی/ کتاب الدعوات عن رسول اللہ صلی اللہ علیہ وسلم/حدیث: 3479]

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அல்லாஹ்விடம் துஆ கேளுங்கள். உங்களது துஆ நிச்சயமாக ஒப்புக் கொள்ளப்படும் என்ற இந்த உறுதியுடன் வேண்டுங்கள். (நன்றாக) அறிந்து கொள்ளுங்கள். கவனமின்மையுடனும், அலட்சியத்துடனும் கேட்கப்படுகின்ற மற்றும் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கில் மூழ்கியிருக்கும் உள்ளத்தின் துஆவை அல்லாஹ் தஆலா ஒப்புக் கொள்வதில்லை.

عَنۡ عُمَرَ بۡنِ الۡخَطَّابِ، قَالَ: قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيۡهِ وَسَلَّمَ "لَوۡ أَنَّكُمۡ كُنۡتُمۡ تَوَكَّلُونَ عَلَى اللّٰهِ حَقَّ تَوَكُّلِهِ، لَرُزِقۡتُمۡ كَمَا تُرۡزَقُ الطَّيۡرُ تَغۡدُو خِمَاصًا وَتَرُوحُ بِطَانًا"

[سنن ترمذی/ کتاب الزهد عن رسول اللہ صلی اللہ علیہ وسلم/حدیث: 2344]

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நீங்கள் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொள்வதற்குரிய உரிமையை செலுத்தியவாறு அவன் மீது நம்பிக்கை கொண்டால் பின்னர் காலையில் காலியாக இருக்கும் வயிற்றுடன் சென்று மாலையில் நிறைந்த வயிற்றுடன் திரும்பும் பறவைகளுக்கு உணவு கிடைப்பது போல, உங்களுக்கும் நிச்சயமாக உணவு கிடைக்கும். (ஸுனன் திர்மிதி - ஹதீஸ் எண்: 2344)

* * * * * * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

## எந்த அளவு செயல் பலவீனங்களும் இறையச்சத்தில் பலவீனமும் காணப்படுகிறதோ அவை அனைத்திற்கும் மூலக்காரணம் இறை ஞானத்தின் குறைபாடாகும்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஈமானை வலுப்படுத்துவது மிகவும் அவசியமாகும். ஈமான் இல்லாத நற்செயல்கள் மரணித்தவற்றை போன்றதாகும். ஈமான் இருக்கும்போது, மனிதனுக்கு எத்தகைய இறை ஞானம் கிடைக்கின்றது என்றால், அதன் மூலம் அவன் விண்ணை நோக்கி உயர்ந்து செல்கிறான். இந்த நிலைகள் இல்லையெனில், பின்னர், அருட்களும் கிடைப்பதில்லை; மகிழ்ச்சியும் கிடைப்பதில்லை. இறைவனைக் கண்ட பிறகு ஏதாவது அமல் செய்யப்படும்போது, அந்நிலையில் அந்த அமலுக்கு என்ன பொலிவு இருக்குமோ அதுபோன்ற பொலிவு வேறு ஒருவரின் அமலில் இருக்க முடியுமா? ஒருபோதும் முடியாது. எந்த அளவு செயல் பலவீனங்களும், இறையச்சத்தில் பலவீனமும் காணப்படுகிறதோ அவை அனைத்திற்கும் மூலக்காரணம் இறை ஞானத்தின் குறைபாடாகும். ஒரு புழுவிற்கும் சிறு அறிவு இருக்கின்றது. ஆக, மனிதன் அதற்கு அஞ்சுகின்றான்; அவ்வாறிருக்க, இறை ஞானம் இருந்தால், மனிதன் எப்படி இறைவனுக்கு அஞ்சாமல் இருப்பான்? சுருங்கக் கூறின், இறை ஞானத்திற்கான தேவை மிக அதிகம் உள்ளது.

நான் பார்க்கின்றேன். நமது ஜமாஅத் முன்னேறிக் கொண்டிருக்கின்றது என்றபோதிலும், தற்போது தோல் மட்டுமே வளர்ந்து கொண்டிருக்கின்றது. சாறும் அதிகரிக்கின்றது என்றால் அது விஷயமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் எத்தகையதாக இருந்தது? என்று மீண்டும், மீண்டும் எண்ணம் தோன்றுகிறது. அன்னார் (ஸல்) மீது ஈமான் கொண்டு ஸஹாபா பெருமக்கள் ஒரே முறையில் உலகின் நிலையை மாற்றி விட்டார்கள். உயிரை விட பெரிய விஷயம் என்ன இருக்கின்றது? தமது இரத்தத்தால் மார்க்கத்தில் முத்திரை பதித்து விட்டார்கள்.

இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம்....

## தஃப்ஸீரே கபீர்

## 'யகீன்' என்பதன் பொதுவான மற்றும் உண்மையான பொருள் என்ன?

وَاعۡبُدۡ رَبَّکَ حَتّٰی یَاۡتِیَکَ الۡیَقِیۡنُ (15:100)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகிறார்கள்:

"யகீன்" என்பதற்கு இந்த இடத்தில் 'மரணம்' என்று பொருளாகும். கூறுகின்றான்: தற்போதோ மரணம் வரை எமது இறை வணக்கத்தில் ஈடுபட்டிருப்பீராக! அதாவது, இதனால் இஸ்லாத்திற்கு கிடைக்க இருக்கின்ற அந்த வலிமையில் இனி எந்தத் தடங்கலும் ஏற்படாது. மேலும், நீர் உமது மரணம் வரை முழு சுதந்திரத்துடன் அல்லாஹ் தஆலாவை வணங்க முடியும். தற்போது உமது இறை வணக்கங்களில் தடைகளை ஏற்படுத்தும் இந்த மக்களை அல்லாஹ் எப்படி அழித்து விடுவான் என்றால், உமது முழு வாழ்வும் இறை வணக்கத்தின் சுதந்திரத்தின் அடிப்படையில் நிம்மதியாக கழியும்.

'யகீன்' என்பதன் வழக்கமான பொருளும் இந்த இடத்தில் பொருந்தக் கூடும். அந்நிலையில் இதன் அர்த்தம் இவ்வாறாக அமையும். எந்த நேரத்திற்கான வாக்குறுதி உள்ளதோ அது வரும் வரை குறிப்பாக இறை வணக்கத்தில் மும்முரமாக இருப்பீராக! ஆக, ஒருவகையில் தண்டனை அல்லது வாக்களிக்கப்பட்ட நேரத்தின் தாக்கங்கள் வெளிப்படுவதன் பெயர் யகீன் (நம்பிக்கை) என்று வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், வாக்குறுதி நிறைவேறாத வரை அதன் முழுமையான உண்மைத்துவம் வெளிப்படுவதில்லை.

எனவே கூறினார்கள்: அல்லாஹ்வின் புறமிருந்து வாக்குறுதி இருக்கும்போது, பின்னர் குறிப்பாக துஆ மற்றும் இறை வணக்கத்தில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் அந்த வாக்குறுதி எல்லா நன்மையுடன் நிறைவேறும். அதற்கு மற்ற நாட்களில் இறை வணக்கங்களை கைவிட்டு விடலாம் என்பது இதன் பொருள் அன்று.

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்தும் மேலான தகுதியும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் டிசம்பர் 10 2004

அன்று நிகழ்த்திய ஜுமுஆ பேருரையிலிருந்து

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ (آل عمران:32)

اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا (الاحزاب:57)

பொருள்: நீர் கூறுவீராக! (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மீண்டும் மீண்டும் அருள் செய்பவனுமாவான்.

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காகப்) பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே நம்பிக்கை கொண்டவர்களே இந்த நபிகள் நாயகம் அவர்களு(க்கு எப்போதும் அருள் பொழியுமாறும் சாந்தியும், சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள்.

இவை இரண்டு வசனங்களாகும். ஒன்று சூரா ஆலி இம்ரானின் வசனமாகும். மற்றொன்று சூரா அல்-அஹ்ஸாபின் வசனமாகும். மொழியாக்கத்தை நீங்கள் செவியுற்று விட்டீர்கள். ஆலி இம்ரானின் இந்த வசனத்தில் அல்லாஹ் நமக்கு இன்னும் கூறப்போனால், முழு உலக மனிதர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக இந்தத் தூதுச் செய்தியை வழங்கியுள்ளான். அதாவது இனி அனைத்து முந்தைய மற்றும் எதிர்கால முன்மாதிரிகளும் முற்றுப் பெற்று விட்டன. தற்போது பின்பற்றத் தகுந்த ஒரு முன்மாதிரி இருக்கின்றது என்றால் அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியாகும். இந்த பின்பற்றுதலின் முன்மாதிரி எப்படி நிலை பெறும்? அது இவ்வாறு நிலைபெறும். உதாரணமாக, ஒரு காதலர் தனது காதலியின் விருப்பத்திற்குரிய மற்றும் விருப்பமற்ற விஷயங்களை தமக்குரியதாக ஆக்கிக் கொள்வதைப் போன்று அவர் ஆக்கிக் கொள்கிறார்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவீர்கள் என்றால், பின்னர் அப்போதுதான் நானும் உங்களது பாவங்களை மன்னிப்பேன். மேலும் உங்களுடன் அன்புடன் நடந்து கொள்வேன். மேலும் உங்களது மார்க்க மற்றும் பௌதீக நலன்களுக்கான ஏற்பாட்டையும் செய்வேன். ஆக, ஒருவகையில் தற்போது அல்லாஹ் வரை சென்றடைவதற்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டு விட்டன. ஒரு வழி திறந்துள்ளது என்றால், பின்னர் அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி அன்னாரைப் பின்பற்றி நடப்பதன் மூலம் மட்டுமே அல்லாஹ்வை சென்றடைய முடியும். ஆக, இந்த ஒரேயொரு வழி மட்டுமே திறந்துள்ளது. அடுத்து, இந்த அழகிய முன்மாதிரியை பின்பற்றுவதற்காகவும், அன்னாருடைய நேசத்தை உள்ளத்தில் அதிகரிக்கச் செய்வதற்குமான வழிமுறை நான் முன்னர் ஓதிய சூரா அல் அஹ்ஸாபின் வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அது இதுவாகும். அதாவது இந்த நபி ஒன்றும் சாதாரண நபி அல்ல. இவரோ அல்லாஹ்வின் மிகவும் விருப்பத்திற்குரியவர் ஆவார். வானமும், பூமியும் அவருக்காக படைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வும் அவர் மீது அருள் புரிகின்றான். மேலும் அவனது வானவர்களும் இதே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதாவது அல்லாஹ்வின் இந்த அன்பிற்குரிய நபியின் மீது அருள் புரிய வேண்டுகின்றனர். மேலும் துஆக்கள் செய்து கொண்டிருக்கின்றனர். எனவே ஈமான் கொண்டிருப்பதாக வாதம் புரிந்தவாறு அல்லாஹ்வின் நேசத்தை விரும்பும் மக்களே, உங்களது பணியும் என்னவென்றால், இந்த நபியின் மீது நேசம் கொள்ளுங்கள். அவர் மீது ஸலவாத் ஓதுங்கள். மேலும், அதிக அதிகமாக துரூத் ஓதுங்கள். நீங்கள் இவ்வாறு இந்த நபியின் மீது துரூதும், ஸலாமும் ஓதுவீர்கள் என்றால் பின்னர் உங்கள் மீது அவரை பின்பற்றுவதற்கான வழிகளும் திறந்து கொண்டே செல்லும். இந்த வழிகள் திறக்க, திறக்க நீங்கள் அவரை பின்பற்றி நடந்து கொண்டே செல்வீர்கள். மேலும் அதே அளவில் அதிகமாக அல்லாஹ்வின் நேசத்தை பெறக் கூடியவர்களாக ஆகிக் கொண்டே செல்வீர்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்:

துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான மூன்று வழிமுறைகளே உள்ளன: முதல் வழிமுறை

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ

(ஆலி இம்ரான்: 32) என்பதாகும். இரண்டாவது வழிமுறை,

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا

(அல்-அஹ்ஸாப்: 57) என்பதாகும். மூன்றாவது வழிமுறை இறை அருட்கொடை.

(ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் ஒரு சொற்பொழிவும், வஹ்தத்துல் வுஜூத் விவகாரம் குறித்து ஒரு கடிதம், பக்கம் 23)

உங்களது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள மார்க்கத்தைப் பின்பற்றுங்கள். அன்னார் (ஸல்) மீது அன்பு கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வின் நேசத்தை பெற்றுக் கொள்ளுங்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதுங்கள். அதன் மூலம் அந்த நேசத்தில் நீங்களும் முன்னேறுவீர்கள். மேலும் அதன் காரணமாக அல்லாஹ்வின் நேசமும் உங்களுக்கு கிடைக்கும். அடுத்து, அல்லாஹ்வின் முன்னால் குனியுங்கள். அவனிடம் பாவமன்னிப்பு வேண்டுங்கள். மேலும் அவனை வணங்குங்கள். அல்லாஹ் அல்லாத அனைத்தையும் விட்டு விடுங்கள்.

ஆக, இந்த விஷயங்கள் இருக்கின்றன. இவை உருவாகி விட்டால், பின்னர் நீங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாகவும், இம்மை மற்றும் மறுமையை செம்மைப்படுத்தக் கூடியவர்களாகவும் திகழ்வீர்கள்.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:

'அவர்களிடம் இது தொடர்பாக கூறிவிடுங்கள். நீங்கள் இறை நேசராக ஆக விரும்பினால், மேலும், உங்களின் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், பின்னர் அதற்கு ஒரேயொரு வழிதான் உள்ளது. அது என்னவென்றால் நீங்கள் எனக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

கூறினார்கள்: என்னைப் பின்பற்றுவது என்பது எத்தகைய விஷயம் என்றால், அது இறைவனின் கருணையிலிருந்து உங்களை அவநம்பிக்கை அடைய விடாது. மேலும், பாவமன்னிப்பிற்கு அதுவே காரணியாக இருக்கிறது. மேலும், அல்லாஹ்வின் அன்பிற்குரியவராக மாற்றுகிறது. அதாவது, எவர் உண்மையாகப் பின்பற்றக் கூடியவராக இருக்கிறாரோ அவர் ஒருபோதும் அல்லாஹ்வின் கருணையிலிருந்து நம்பிக்கையிழப்பதில்லை. அவர்களிடம் ஒருவித உறுதியான நிலை ஏற்படுகிறது. அதாவது, இந்த அம்சத்தில் நாம் நிச்சயமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்று விடுவோம் ; மேலும் அவனது அன்பை பெற்று விடுவோம் என்று உறுதி கொள்கின்றனர்.

ஆக, அன்னார் (ஸல்) கூறினார்கள்: என்னைப் பின்பற்றுதல் பாவமன்னிப்பிற்கு காரணியாக அமைகின்றது. மேலும் அல்லாஹ்வின் நேசராக ஆக்கி விடுகின்றது. நாங்கள் அல்லாஹ்விடம் அன்பு கொள்கிறோம் என்ற உங்களது வாதம் இந்த நிலையில் மட்டுமே உண்மையானதாக இருக்கும்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: உலகில் கோடிக்கணக்கான தூய இயல்பு படைத்த மக்கள் வாழ்ந்து சென்றுள்ளனர். எதிர்காலத்திலும் இருப்பர். ஆனால், எல்லாரையும் விட சிறந்த மற்றும் எல்லாரையும் விட உயர்ந்தவராக இறைவனின் அந்த அடியாரைக் காண்கிறோம். அன்னாரது பெயர் முஹம்மது (ஸல்) ஆகும். اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا (الاحزاب:57)
(அல் அஹ்ஸாப்: 57)

எந்த சமுதாயங்களின் சான்றோர்களின் நிலை திருக்குர்ஆனில் விரிவாக எடுத்துரைக்கப்படவில்லையோ அவர்களின் குறிப்பை விட்டு விடுங்கள். எந்த நபிமார்களைப் பற்றிய குறிப்பு திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளதோ அவர்களைப் பற்றிய கருத்தை மட்டுமே நாம் வெளிப்படுத்துகிறோம். உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா, ஹஸ்ரத் தாவூத், ஈஸா (அலை) மற்றும் இதர நபிமார்கள்.

எனவே அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகிற்கு வராமலும்,

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

## ஜல்ஸா ஸாலான யூ.கே 2026-ம் ஆண்டு சந்தர்ப்பத்தின்போது ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு வழங்கப்பட்ட பொன்னான அறிவுரைகள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 ஜூலை 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **வஃபா** மாதம் **24 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○

صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ○

அல்லாஹ்வின் அருளால் இன்று பிரிட்டன் ஜல்ஸா ஸாலானா தொடங்குகிறது. நாட்டின் மூலை முடுக்கிலிருந்தும், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் விருந்தினர்கள் இதில் கலந்து கொள்வதற்காக வருகின்றார்கள் அல்லது வருகை தந்துள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரு சிறப்பான ஆன்மிக நோக்கத்திற்காக இங்கு வருகை தருகின்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்கள் ஆவர். எனவே, இந்த விருந்தினர்களுக்கு விருந்துபசரிப்பு செய்வதும் சிறப்பு கௌரவமாகும்.

அல்லாஹ்வின் அருளால் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் எங்கு ஜல்ஸா ஸாலானா நடைபெறுகின்றதோ அங்குள்ள குழந்தைகள், இளைஞர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் என அனைவரும்,நாம் மாநாட்டிற்கு வரும் விருந்தினர்களுக்குச் சேவை செய்ய வேண்டும்' என்ற புரிதலை பெற்றுள்ளனர். இதற்காக, அவர்கள் அனைவரும் தங்களை தன்னார்வலர்களாக சமர்ப்பிக்கின்றார்கள். உலக மக்களின் முன்னுரிமைகள் மாறியிருந்த போதிலும், ஜமாஅத்தின் தூய உறுப்பினர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குச் சேவை செய்வதற்காகத் தங்களை அர்ப்பணிக்கிறார்கள். நான் கூறியது போன்று, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை மேலும் பல்வேறு உலகியல் பணிகளில் ஈடுபட்டுள்ள மக்கள், இந்த நாட்களில் தங்களது பணிகளிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு தங்களை இந்தத் தொண்டிற்காக சமர்ப்பிக்கின்றனர். அல்லாஹ் தஆலா விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்கும், அவர்களுக்கு கண்ணியம் மற்றும் மரியாதை செலுத்துவதற்கும் கட்டளை வழங்கியுள்ளான் என்ற புரிதலை பெற்றிருக்கின்ற மக்கள் இவர்கள் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சொல் மற்றும் செயல் மூலமாக இந்த விஷயத்தை வலியுறுத்தியுள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதன் பக்கம் மீண்டும், மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள்.

பயணிகளுக்கு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குங்கள் (பனீ இஸ்ராயீல்:27)என்று அல்லாஹ் கூறுகின்றான். இதே போன்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் உதாரணம் திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளது. அதாவது, அன்னாரிடம் விருந்தினர்கள் வருகை தந்தபோது, அன்னார் (அலை) விருந்தினர்களைக் கண்டு, உணவு உண்பீர்களா? மாட்டீர்களா? என்று கேட்கவில்லை ; மாறாக, உடனடியாக ஒரு காளைக் கன்றை அறுத்து அதனை பொரித்து விருந்தினர்களுக்கு முன் சமர்ப்பித்து விட்டார்கள். (ஹூத்: 70)

இதேபோன்று, ஒரு ஹதீஸில் வருகின்றது.

அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்ளக் கூடியவர்கள் விருந்தினர்களுக்குரிய ஆகுமான உரிமைகளை செலுத்துகின்றனர் அல்லது செலுத்துங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, ஆகுமான உரிமை என்பது என்ன? என்று கேட்கப்பட்டது. ஒரு பகல் மற்றும் ஓர் இரவுக்கான விருந்து உபசரிப்பாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்.

மூன்று நாட்கள் வரை அவருக்கு விருந்து உபசரிப்பு செய்யுங்கள் என்ற அறிவிப்பு மற்றோர் இடத்தில் கிடைக்கின்றது. (ஸஹீஹுல் புஹாரி,கிதாபுல் அதப், ஹதீஸ் எண்: 6135)

இதுவோ சிறப்பு விருந்தினர்களுக்குரியதாகும். பொதுவாக வீட்டிற்கு வருகை தரக் கூடிய மக்கள் இருக்கின்றனர். அவர்கள் சில நாட்களுக்காக வருகின்றனர். பொதுவாக ஒருவர் விருந்தினராக வரும்போது அவருக்கு விருந்து உபசரிப்பு செய்ய வேண்டும். இதுவே முஸ்லிம்களுக்கான கட்டளையாகும். மேலும், இன்றைய காலத்தில் ஜல்ஸாவின் நாட்களில் விருந்தினர்கள் வருகின்றனர்; இவர்கள் நீண்ட நெடிய தூரம் பயணம் செய்து வருகின்றனர். வெளிநாடுகளிலிருந்து வருகின்றனர். இவர்களோ மூன்று நாட்களுக்கும் கூடுதலாக தங்குவர். ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் இவர்கள் எத்தனை நாட்களுக்கு வேண்டுமானாலும் தங்குவர். மூன்று முதல் நான்கு வாரம் வரை அல்லது இரண்டு முதல் மூன்று வாரம் வரை ஜமாஅத் அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்கின்றது. அதற்காக அல்லாஹ் புரிந்துள்ள மாபெரும் கருணை என்னவென்றால், ஜமாஅத்திடம் அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதற்காக எவ்வளவு பெரும் எண்ணிக்கையில் ஊழியர்கள் இருக்கின்றனர் என்றால், அவர்கள் Paid ஊழியர்கள் அல்ல. மூன்று முதல் நான்கு வாரங்கள் வரை தன்னார்வலர்கள் இந்த நோக்கத்திற்காக தங்களை சமர்ப்பிக்கின்றனர். இன்னும் கூறப்போனால், இங்கு யூ.கேவில் விருந்து உபசரிப்பிற்கான அமைப்பு எவ்வளவு பரந்துபட்டதாக ஆகிவிட்டது என்றால், ஆண்டு முழுவதுமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய விருந்தினர் இல்லம் இயங்குகின்றது. மேலும் இந்த விருந்தினர் இல்லத்தில் சேவையாற்றுவதற்காக,சொந்தமாக வியாபாரம் செய்யக் கூடிய பல மக்கள் இருக்கின்றனர் ; சிலருக்குச் சொந்த உணவகங்கள் இருக்கின்றன ; சிலருக்குச் சமையல் சேவை (Catering) வியாபாரங்கள் உள்ளன; இவர்கள் அனைவரும் வருடம் முழுவதுமே ஒரு சில நாட்களையாவது விருந்தினர்களின் சேவைக்காக வழங்குகிறார்கள். மேலும், இந்தச் சிறப்பு இப்போது பிரிட்டன் ஜமாஅத்திற்கு கிடைத்துள்ளது. ஏனெனில் இங்கு கிலாஃபத் உள்ளது, மேலும் காலத்தின் கலீஃபா அவர்கள் இங்கு இருப்பதன் காரணத்தால் இங்கு மக்களின் வருகை என்பதும் மிக அதிகமாக உள்ளது; இதன் காரணமாக விருந்தோம்பலும் செய்ய வேண்டியுள்ளது. பொதுவான விருந்தோம்பலோ இங்குத் தொடர்ந்து நடைபெறுகிறது, மேலும் வல்ல இறைவனின் அருளால் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மிகச் சிறந்த முறையில் இந்த விருந்தோம்பலைச் செய்து வருகிறார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக!

நான் கூறியது போல, ஊழியர்கள் மட்டுமின்றி, தன்னார்வலர் என்ற ரீதியிலும் ஏராளமான மக்கள் மிகவும் தொண்டாற்றி வருகின்றார்கள்.ஆனால், எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று இவை ஜல்ஸா நாட்களாகும்; நாம் இந்த நாட்களில் குறிப்பாக விருந்தினர்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது போல, அவரை அதாவது விருந்தினரை முழு கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொள்ளுங்கள். ஏனெனில் இது அவசியமாகும்; நமது ஈமானுக்கு அவசியமாகும். அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீதான ஈமானிற்கு

இது அவசியமாகும். ஒரு முஃமின் விருந்தோம்பல் செய்பவராக இருக்கின்றார்; மேலும் அவர் நற்பண்புடையவராக இருக்கின்றார்; மேலும் நற்பண்பு உள்ளவராக இருக்க வேண்டும் என்பதும் ஈமானின் ஒரு நிபந்தனையாகும். மேலும், அவர் தமது விருந்தினர்களுடன் இன்முகத்துடன் நடந்து கொள்கின்றார். இவை ஈமானிற்கான நிபந்தனையுமாகும்.

எனவே, இது இந்த நாட்களில் நமது ஆயிரக்கணக்கான தன்னார்வலர்களுக்கு கிடைக்கும் மிகப் பெரிய கௌரவமாகும். அந்த தன்னார்வலர்களில் நமது பெண் பிள்ளைகளும், பெண்களும் அடங்குவர் ; சிறுவர்களும், இளைஞர்களும், ஆண்களும் அடங்குவர். மேலும் பெரிய வயதுடைய நபர்களும் அடங்குவர். சிறிய வயதுடைய பிள்ளைகளும் அடங்குவர்.

ஆக, அவர்கள் அனைவருக்கும் இந்த கௌரவம் கிடைத்து வருகிறது. மேலும், அவர்கள் இதனை நினைவிற் கொள்ள வேண்டும்: அதாவது, விருந்தோம்பலுக்கான உரிமையைச் செலுத்தும்போதும், ஒவ்வொரு விருந்தினருடனும் கண்ணியம் மற்றும் மரியாதையுடன் நடந்து கொள்ளும்போதும் மேலும் அவர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொள்ளக் கூடியவர்களாக இருக்கும்போதும் தான் அவர்களுக்குக் கிடைத்து வருகின்ற இந்த கௌரவத்திற்கான உரிமையை அவர்கள் நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்பார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ‘விருந்தினரின் உணர்வுகள் மிகவும் மென்மையானவையாகும். எனவே எப்போதும் அவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

( மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 111, பதிப்பு 2022ம் ஆண்டு பதிப்பு)

எனவே, நாம் விருந்தினர்களுக்கு அனைத்து வழிகளிலும் சேவை செய்ய வேண்டும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நாம் நம்மை அர்ப்பணித்திருந்தால், பின்னர் அல்லாஹ் தஆலாவின் திருப்தியைப் பெறுவதற்காக, இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும், இதன் மூலம் இந்த சேவைக்கு பகரமாக அல்லாஹ் தஆலாவும் நம்மிடம் திருப்தி கொள்வான்; மேலும் இயன்ற வரை நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு சேவை செய்வதற்கான உரிமையை நிறைவேற்றவும் முடியும். விருந்தோம்பல் செய்யும் நமது ஊழியர்கள் இருக்கின்றனர்; அல்லது நமது ஜல்ஸாவிற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. அவர்களாலும் மற்றும் அந்த ஏற்பாடுகளாலும் வெளியிலிருந்து வருகை தரும் ஜமாஅத்தைச் சேராத விருந்தினர்களும், முஸ்லிம் அல்லாத விருந்தினர்களும் பெரிதும் தாக்கத்திற்குள்ளாகின்றனர். இவ்வளவு ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு சமைக்கப்படுவதையும், தன்னார்வலர்கள் உணவைச் சமைத்துக் கொண்டிருப்பதையும் கண்டு அவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். பின்னர் அவர்களுக்கு ஒரே ஏற்பாட்டின் கீழ் உணவளிக்கவும்படுகிறது; மேலும் அவர்களுக்குச் சேவையும் செய்யப்படுகிறது என்பதையும் பார்க்கின்றனர்.

மேலும் தொண்டர்களின் ஒரு முழுமையான கட்டமைப்பு இங்கே இயங்குகிறது; அதில் போக்குவரத்து நிர்வாகமும் உள்ளது; உணவளிக்கும் நிர்வாகமும் உள்ளது; சுகாதாரத்திற்கான நிர்வாகமும் உள்ளது; சமையலுக்கான நிர்வாகமும் உள்ளது; குடிநீர் விநியோக நிர்வாகமும் உள்ளது. சுருங்கக் கூறின், அல்லாஹ் தஆலாவின் அருளால் ஜமாஅத்தின் தன்னார்வலர்கள் பணியாற்றும் எண்ணற்ற துறைகள் உள்ளன; அவர்கள் வெறுமனே பணியாற்றவில்லை; மாறாக, அல்லாஹ் தஆலாவின் அருளால் மிகச் சிறந்த முறையில் பணியாற்றுகின்றனர். இதைப் பார்த்து அந்நிய மக்களும் பெரிதும் தாக்கத்திற்குள்ளாகின்றனர். இதுவும் தப்லீஃக்கிற்கான ஒரு வழிமுறையாகும்.

எனவே, இங்கு வரும் ஒவ்வொரு தொண்டரும் அவர்களில் சிலர் பழையவர்களும், அனுபவம் வாய்ந்தவர்களும் ஆவர்; ஆனால், புதியவர்களும் இருக்கின்றனர்; அவர்களும் நினைவிற் கொள்ள வேண்டும்! அதாவது, நீங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குச் சேவை செய்வதற்காகவே இங்கு வந்துள்ளீர்கள் என்றால் பின்னர் அதற்குரிய உரிமையை நிறைவேற்றுவதற்கு முழு முயற்சி செய்ய வேண்டும். மேலும், விருந்தினருக்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும். இது உங்கள் ஈமானுக்கு அவசியமானதாகும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள், விருந்தினர்களுக்கு எந்த அளவுக்கு சேவை செய்து வந்தார்கள்? அல்லது அவர்களை எந்த அளவிற்கு கருத்தில் கொண்டு வந்தார்கள்? ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் விருந்தினர்களின் உபசரிப்பில் மிகுந்த கவனம் செலுத்தி வந்தார்கள். லங்கர் கானாவின் விருந்தினர்களைக் கவனிப்பதற்காக ஹஃபிழ் ஹாமித் அலீ ஸாஹிப் நியமிக்கப்பட்டிருந்தார்கள். எனவே இந்த விருந்தினர்களை சிறப்பாக கவனியுங்கள் என்றும், சாதாரண நாட்களில் விருந்தினர்களின் அந்தஸ்திற்கேற்ப இவர்களுக்கு சேவை செய்யுங்கள் என்றும் அன்னார் (அலை) அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் அன்னாருக்கு கவனமூட்டி வந்தார்கள்.

(திக்ரே ஹபீப் - ஹஸ்ரத் முஃப்தி முஹம்மத் ஸாதிக் ஸாஹிப், பக்கம் 195)

அல்லாஹ்வின் அருளால், சாதாரண நாட்களில் ஜமாஅத்திற்கு வரும் விருந்தினர்களுக்கு, இயன்றவரை ஜமாஅத் தனது வளங்களுக்குள் இருந்து கொண்டு சேவையாற்றுகிறது. ஆனால் ஜல்ஸாவின் நாட்களில் இந்த முறையில் கவனம் செலுத்த முடியாது. இங்கு ஒரு பொதுவான விருந்து உபசரிப்பு நடைபெறுகிறது.அதனால் இதிலும் மிகுந்த எச்சரிக்கையும், கவனமும் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஒரு ஸஹாபி (ரலி) கூறுகிறார்கள்: அநேகமாக 1902 ஆம் ஆண்டு, நான் அய்மனாபாத்தில் இருந்து காதியான் வந்து கொண்டிருந்தேன்.அப்போது காதியானுக்குப் பயணம் மேற்கொள்வதற்காக காத்திருந்தவாறு லாகூர் இரயில் நிலையத்தில் அமர்ந்திருந்தேன்; அங்கே எனக்கு ஒரு நண்பர் கிடைத்து விட்டார். நல்லவிதமாக, நாங்கள் இருவரும் காதியானுக்குப் பயணம் செய்யத் தொடங்கினோம். வழியில் பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. பட்டாலா சென்றடைந்தபோது, மழை மிகக் கடுமையாகப் பெய்தது.

எவ்வாறிருப்பினும், நாங்கள் அங்கே இறங்கி ஒரு குதிரை வண்டியை வாடகைக்கு எடுத்து, காதியானை நோக்கிப் புறப்பட்டோம். காதியானுக்கு அருகில் சென்றபோது மழை நின்றுவிட்டது என்று நினைக்கிறேன் என்று கூறுகின்றார்கள். எது எப்படியோ, நாங்கள் தாருல் அமானை அடைந்தோம். நாங்கள் அங்கு சென்று சேர்ந்ததும், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் கட்டளைப்படி, இந்த சம்பவம் எடுத்துரைக்கப்பட்ட நாட்களில் புத்தகக் கடை இருந்த அந்த அறையில் எங்களுக்கு இடம் வழங்கப்பட்டது. எது எப்படியோ, காலையில் சிற்றுண்டி நேரத்தில் எங்களுக்கு மிகச் சிறந்த சிற்றுண்டி வழங்கப்பட்டது என்று அவர் கூறுகிறார். உணவும் மிக நன்றாகப் பரிமாறப்பட்டது. ஷாஃ ஸாஹிப் மற்றும் அவருடன் இருந்த மற்ற விருந்தினர்களிடம், ‘உங்களுக்கு ஏதேனும் சிரமம் இருந்தால் கூறுங்கள்! சிரமம் எதுவும் இல்லையே?’ என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். இதேபோல் மற்றவர்களிடமும் விசாரிப்பார்கள். ஆக, அன்னார் (அலை) விருந்தினர்களை மிக அதிகமாகவும், மிக உயர்ந்த அளவிலும் கண்ணியப்படுத்தி வந்தார்கள்.‘

(ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 155)

அதேபோல், பெஃராவைச் சேர்ந்த மன்ஸூர் அஹ்மது ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ‘எனது கண்ணியத்திற்குரிய தந்தை அவர்கள் மிகவும் தொடக்க கால அஹ்மதிகளில் ஒருவர் ஆவார்கள். 1894 ஆம் ஆண்டில், அன்னார் தமது தாயாருடன் முதன்முறையாக ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைச் சந்திப்பதற்காகக் காதியானுக்கு வந்தார்., தாயாருடன் சேர்ந்து அன்றே பைஅத் செய்தார். கூறுகின்றார்: எனது பாட்டனாரிடம் சிறுவயதில் கலீஃபா அவ்வல் (ரலி) அவர்கள் கல்வி பயின்று வந்தார்கள். மேலும், எனது பாட்டனாரின் மூன்றாவது மனைவியாக இருந்தவர் ஹஸ்ரத் கலீஃபா அவ்வல் (ரலி) அவர்களின் வளர்ப்புச் சகோதரியாகவும் இருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: நான் எனது மதிப்பிற்குரிய தந்தையாரிடம், அந்தக் காலத்தில் நீங்கள் (காதியானுக்கு) வரும்போது நிகழ்ந்த ஏதேனும் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கிறதா?’ என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: 'நாங்கள் சுமார் எட்டு பேர்- ஒரு நாள் ஹுஸூர் (அலை) அவர்களுடன் மதிய

உணவு சாப்பிடுவதற்காக, அந்த நேரத்தில் இன்னும் பழைய நிலையில் இருந்த மஸ்ஜித் முபாரக்கில் இருந்தோம். நாங்கள் பள்ளிவாசலில் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அக்காலத்தில் அது மிகச் சிறிய பள்ளிவாசலாக இருந்தது. மேலும், விருந்தினர்கள் அமர்வதற்கு வேறு இடம் எதுவும் இருக்கவில்லை. அன்னார் (அலை) எங்களை அங்கேயே அமர வைத்து வந்தார்கள். ஒரு வரிசையில் எட்டு முதல் பத்து பேர் நின்று கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் கலீஃபா அவ்வல் (ரலி) அவர்களும் இந்தச் சபையில் கலந்து கொண்டிருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: இரு வகை குழம்புகள் இருந்தது. வீட்டிலிருந்து சமைக்கப்பட்டு கொண்டு வரப்பட்டது. அவை இரண்டிலும் இறைச்சி இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது தட்டிலிருந்து, தமது குழம்பிலிருந்து இறைச்சித் துண்டை எடுத்து மீண்டும் மீண்டும் மற்றவர்களின் குழம்பில் வைத்து வந்தார்கள். தமது தட்டில் ஏதேனும் இறைச்சித் துண்டு வந்தால், அதையும் மற்றவர்களின் குழம்பில் வைத்து விடுவார்கள். மேலும், முதல் கலீஃபா (ரலி) அவர்களைப் பற்றியும் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைப் பார்த்து, அன்னாரும் விருந்தினர்களுக்காக இதேபோன்று செய்து வந்தார்கள். சில நேரங்களில் விருந்தினர்கள் ஏதேனும் பொருளை விரும்பக் கூடும். ஒருமுறை உணவருந்தும்போது ஒரு விருந்தினர், மாம்பழம் சாப்பிட ஆசையாக இருக்கிறது எனக் கூறினார். அன்னார் (அலை) கூறினார்கள்: உணவோடு சேர்த்து மாம்பழம் சாப்பிடுகின்ற மிக நல்ல எண்ணம் உமக்குத் தோன்றியுள்ளது. அப்போது, நான் சந்தைக்குச் சென்று இப்போதே மாம்பழம் வாங்கி வரட்டுமா? என்று அங்கு அமர்ந்திருந்த மற்ற விருந்தினர்களிலோ அல்லது அங்குள்ள உள்ளூர்வாசிகளிலோ ஒருவர் கூறினார். அதற்கு, ஹுஸூர் (அலை) அவர்கள், 'வேண்டாம்! உட்காருங்கள் என்று கூறினார்கள். சிறிது நேரம் கழித்து ஒரு பார்சல் வந்தது. அதில் ஒருவர் அனுப்பிய மாம்பழங்கள் இருந்தன. அதில் எட்டு மாம்பழங்கள் இருந்தன. ஆட்களும் எட்டு பேர் இருந்தனர். அதாவது, வந்த அந்த பார்சலிலும் எட்டு மாம்பழங்கள் இருந்தன. ஹுஸூர் (அலை) அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாம்பழத்தைக் கொடுத்து, தமது பங்கில் வந்த மாம்பழத்தையும் வெட்டி மக்களுக்கு வழங்கி வந்தார்கள்; மேலும், விருந்தோம்பல் செய்து கொண்டிருந்தார்கள்.

(ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மத் - தொகுதி 2, பக்கம் 204-205)

இதேபோல் ஹஸ்ரத் பத்ருத்தீன் ஸாஹிப் மாலியர் கோட்லா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் இந்த எளியவன் என் தந்தையாருடன் சேர்ந்து போரிங் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தேன். இரவு ஒன்பது மணி ஆகிவிட்டது. இஷா தொழுகையும் முடிந்துவிட்டது. ஹுஸூர் (அலை) அவர்கள் தம் கையில் பாலும், டபுள் ரொட்டியும் இருந்த ஒரு கிண்ணத்தை ஏந்தியபடி கிணற்றடிக்கு வந்து விட்டார்கள். மேலும், 'பாபாஜி! விருந்தினர் யாரேனும் பசியோடு இருக்கிறார்களா? என்று என் தந்தையாரிடம் கேட்டார்கள். அப்போது, 'ஹுஸூர்! மியான் நஜ்முத்தீனோ அனைத்து இடங்களிலும் விசாரித்துவிட்டு வந்துள்ளார்; அனைவரும் சாப்பிட்டுவிட்டார்கள்' என்று என் தந்தையார் கூறினார். அப்போது, ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: நல்லது! அப்படியானால் என்னுடன் வாருங்கள்!

அப்போது, தந்தை-மகனாகிய நாங்கள் இருவரும் ஹுஸூர் (அலை) அவர்களுடன் சென்று விட்டோம். விருந்தினர் விடுதிக்குச் சென்று விருந்தினர்களிடம் விசாரித்தபோது, யாரும் கிடைக்கவில்லை, அனைவரும் சாப்பிட்டிருந்தனர்.

அடுத்து, கூறுகின்றார்கள்: அங்கு ஷேர் முஹம்மது என்பவரின் ஒரு கடை இருந்தது. அந்த நேரத்தில் அது திறந்திருந்தது, நாங்கள் அதனருகே சென்றதும் அங்கிருந்த ஒருவர் கூறினார்: 'ஹுஸூர்! எனக்கு பாலைத் தொட்டுக்கொண்டு பிரெட் சாப்பிட வேண்டும். உடனே ஹுஸூர் (அலை) அவர்கள் அந்தப் பாலும், பிரெட்டும் வைக்கப்பட்டிருந்த அந்தக் கிண்ணத்தை அவரிடம் கொடுத்து விட்டார்கள்.

(ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மத் - தொகுதி 3, பக்கம் 285)

அல்லாஹ் தஆலாவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கைகளால் அவர்களுக்கு உணவளிக்க இருந்தான்; மேலும் அவர்களுக்குத் தேவையும் இருந்தது. 'சென்று விருந்தினர்களுக்கு உணவளியுங்கள்' என்று ஹுஸூர் (அலை) அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ் தஆலா போட்டான். பின்னர் அன்னார் (அலை) அந்த விருந்தினரின் சேவைக்காக எடுத்து வந்தார்கள்.

எனவே, இது போன்ற ஏராளமான சம்பவங்கள் அன்னாரின் வாழ்க்கையில் கிடைக்கின்றன. சாதாரண சூழ்நிலைகளிலும் அன்னார் (அலை) விருந்தோம்பல் செய்து வந்தார்கள். எனவேதான் விருந்தினரைக் கண்ணியப்படுத்துவது, கௌரவிப்பது மற்றும் மதிப்பளிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பசியுள்ளவருக்கு உணவளிப்பது குறித்தும், தேவையுள்ளவருக்கு உணவளிப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அல்லாஹ் தஆலாவின் கட்டளையாகும்.

இதேபோல் ஹஸ்ரத் டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் தம்முடைய ஒரு சம்பவத்தைக் எடுத்துரைக்கின்றார்கள். கூறுகின்றார்கள்:

ஜல்சாவின்போது ஒரு நாள் இரவு, ஜமாஅத்தின் செயலாளராக சத்ர் அஞ்சுமனின் கூட்டத்திற்கு நான் செல்ல வேண்டியிருந்தது. மஃக்ரிப் மற்றும் இஷா தொழுகைக்குப் பிறகு நடக்கும் அந்தக் கூட்டத்திற்கு, ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் மட்டுமே வருவார்கள், அவர்களுடன் கூட்டம் நடைபெறும். மஃக்ரிப் மற்றும் இஷா தொழுகைக்குப் பிறகு கூட்டம் நடந்தது. வருகை தந்திருந்த ஜமாஅத் பொறுப்பாளர்களுடன் மட்டும் கூட்டம் நடந்தது.

கூறுகின்றார்கள்: மஹ்ரிப் மற்றும் இஷா தொழுகைக்குப் பிறகு மஸ்ஜித் முபாரக்கில் கூட்டம் நடக்கவிருந்தது. நேரம் குறைவாகவே இருந்தது. எனவே எவ்வாறிருப்பினும், 'நான் பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேன்' என்று கூறினேன். அந்த நேரத்தில் எனக்குப் பசியாக இருந்தபோதிலும், காலை 8 மணிக்குப் பிறகுதான் நான் சாப்பிட்டிருந்தேன். ஆனால் கூறுகின்றார்: ஜமாஅத் பொறுப்பு இருந்தது. 'எப்படியும் நான் பிறகு சாப்பிட்டுக் கொள்வேன்' என்று கூறினேன். கூட்டம் முழுந்து இரவு தாமதமாக நான் (விருந்தினர் இல்லம் எனும்)லங்கர் கானாவிற்கு சென்றபோது, நேரம் இரவு 11 மணி ஆகியிருந்தது. மேலும், எனக்குக் கடுமையான பசியும் எடுத்திருந்தது. நான் எனது ஜமாஅத் மக்களிடம் சென்று அங்கு உணவைப் பற்றி விசாரித்தபோது, உணவு தீர்ந்துவிட்டது என்று தெரியவந்தது. கூறுகின்றார்:

அந்த நேரத்தில் உணவோ முடிந்துவிட்டது. அப்போது நமது நண்பர் ஒருவர் அங்கு சென்றார்; மேலும், உணவு விரிப்பில் இருந்து ஒரு ரொட்டித் துண்டை எடுத்துக் கொண்டு வந்து, 'லங்கர் கானா இப்போது மூடப்பட்டுவிட்டது; இந்தத் துண்டை நீங்கள் சாப்பிடுங்கள். இன்றைக்கு இதை வைத்துச் சமாளியுங்கள்' என்றார்.

கூறுகின்றார்: எனவே, நானும் அந்தத் துண்டை மெல்லத் தொடங்கினேன். நான் இன்னும் அந்தத் துண்டைச் சாப்பிட்டு முடிக்கவில்லை, அதற்குள் எங்கள் அறையின் கதவு பலமாகத் தட்டப்பட்டது. யாரோ பலமாகத் தட்டினார்; மேலும், 'பசியாக இருக்கும் விருந்தினர் யாராவது உணவு சாப்பிடாமல் இருந்தால் அவர் வரட்டும்; லங்கர் கானாவில் சென்று உணவு உண்ணட்டும்! என்ற குரல் வந்தது. இந்த எளியவனின் தோழர்கள் என்னையும் வெளியே அழைத்துச் சென்றார்கள்; மேலும், லங்கர் கானாவை அடைந்து, நன்றி கூறி அங்கு கிடைத்ததைச் சாப்பிட்டு விட்டேன்.

கூறுகின்றார்கள்: அடுத்த நாள் பகல் 10 மணிக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மஸ்ஜித் முபாரக்கின் சிறிய படிக்கட்டின் வாசலில் நின்று கொண்டிருப்பதை நான் கண்டேன்; மேலும், தெருவில் காதிம்கள் ஹுஸூர் (அலை) அவர்களை நோக்கி நின்று கொண்டிருந்தனர்; மேலும், ஹுஸூர் (அலை) அவர்களிடம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களும் அங்கே இருந்தார்கள். ஹுஸூர் மிகுந்த உற்சாகத்தோடு இவ்வாறு வழிகாட்டல் வழங்கிக் கொண்டிருந்தார்கள்:

விருந்தினர்களின் உணவு போன்றவற்றுக்கான ஏற்பாடு நன்றாக இருக்க வேண்டும். ஏனெனில் நேற்றிரவு அல்லாஹ் தஆலா எனக்கு இல்ஹாம் அருளினான்:

பொருள்: நபியே! பசியுடையவர்களுக்கும், தேவையுடையவர்களுக்கும் உணவளிப்பீராக'!

ஆக, நடுஇரவில் என் விழிப்புக்குக் காரணம் இந்த இல்ஹாம் தான் என்று எனக்குத் தெரியவந்தது. இரவில் கதவு தட்டப்பட்டு யாரோ எனக்கு உணவளித்தார். அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்தான்

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

கூறியிருந்ததான். எனவே தான் அன்னார் அனுப்பியிருந்தார்கள்.'(ரிவாயத்தே அஸ்ஹாப் அஹ்மத், தொகுதி 4, பக்கம் 155-156) (தத்கிரா, பக்கம் 631)

எனவே இவர்கள் நன் மக்களாக இருந்தனர்; இவர்களின் பசியின் துயரத்தை அல்லாஹ் தஆலாவும் உணர்ந்து வந்தான்; அவன் தன் நபிக்கு தகவல் அளித்தான். அங்கே அப்படிப்பட்ட ஏற்பாடுகள் இருந்தன; எனவே ஏற்பாடு ஆகிவிட்டது. ஆனால் இங்கு நமது மாநாட்டு நிர்வாகிகள் கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால், சில நேரங்களில் இரவில் வெகுதூரம் பயணம் செய்து தாமதமாக வரும் விருந்தினர்கள் வருகிறார்கள். ஐரோப்பாவின் பயணத்திலிருந்து வருகிறார்கள். சில நேரங்களில் படகு (Ferry) தாமதமாகி விடுகிறது. சில நேரங்களில் விமானம் தாமதமாகிவிடுகிறது. சில நேரங்களில் பயணத்தில் போக்குவரத்தில் (Traffic) சிக்கிக்கொள்கிறார்கள். எனவே அவர்களுக்கான உணவுக்கு ஏற்பாடு இருக்க வேண்டும்.

ஆனால், இந்த முன்னெச்சரிக்கை இருக்க வேண்டும்: உணவு நல்ல நிலையில் இருக்க வேண்டும். வெப்பத்தின் காரணமாக உணவு பாழாகிப்போய், நீங்கள் பழைய உணவைக் கொடுத்து அது ஏதேனும் நோய்க்கு காரணமாகிவிடக் கூடாது. இந்த வகையிலும் விருந்தோம்பல் செய்பவர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்! அவர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நல்ல மற்றும் சிறந்த உணவையும் அளிக்க வேண்டும்.

ஒருமுறை ஹுஸூர் (அலை) கூறினார்கள்: 'அனைவருக்கும் ஒரே வகையான உணவைக் கொடுங்கள்.

அதாவது ஜல்ஸாவிற்கு வரும் அனைவருக்கும் ஒரே வகையான உணவைக் கொடுக்க வேண்டும். இதில் எந்த பாகுபாடும் இருக்கக் கூடாது.

இதற்கு காஜா ஸாஹிப் அல்லது வேறு யாரோ ஒருவர் கூறினார்: 'ஹுஸூர்! சில ஏழைகளும் வருகிறார்கள்; அவர்களுக்குத் தங்கள் வீடுகளில் பருப்பு கூட கிடைப்பதில்லை; அவர்களால் பருப்பு சாப்பிட முடிவதில்லை. துவையலுடன் ரொட்டி உண்டு விடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு இங்கு பருப்பு சோறு அளிப்பது கூட தவறில்லை. அவர்களுக்காக இறைச்சிக் குழம்பு சமைக்க வேண்டிய அவசியமில்லை. பருப்பு அளித்தாலும் எந்தத் தவறும் இல்லை. அவர்களுக்காக இறைச்சிக் குழம்பு சமைக்கத் தேவையில்லை.'

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: 'அவர்களுக்கு வீட்டில் பருப்பு கிடைக்காமல் இருக்கலாம்; ஆனால் மற்றவர்கள் இறைச்சி அல்லது புலாவ் சாப்பிடுவதைப் பார்க்கும்போது, அவர்களுக்கு (இறைச்சி) சாப்பிடும் ஆசை நிச்சயம் உருவாகும். கிடைக்காமல் போகும் சூழலில் அவர்களின் உள்ளம் உடைந்து விடும். 'ஒரு பக்கம் ஒரு விருந்தினரை அமரவைத்து கறி பரிமாறிவிட்டு, மற்றொருவரிடம் பருப்பு சாப்பிடு என்று கூறுவது விருந்தினரின் உள்ளத்தை புண்படுத்துவதாகும். அது நடக்கக் கூடாது.'

அன்னார் (அலை) கூறினார்கள்:

எனது சீடர்கள் ஏழையாக இருந்தாலும் சரி! பணக்காரராக இருந்தாலும் சரி! அவர்களுடன் எனக்கு ஒரே மாதிரியான தொடர்பே உள்ளது.' (ரிவாயாத்தே அஸ்ஹாப் அஹ்மது தொகுதி 4, பக்கம் 65)

எனவே ஒரே மாதிரியான உணவைச் சமையுங்கள். இறைச்சி, புலாவ் போன்றவற்றைக் கொடுத்தால் அனைவருக்கும் அதையே கொடுங்கள், பருப்புத் தந்தால் அனைவருக்கும் அதையே கொடுங்கள். ஆம்! உங்களிடம் வசதி இல்லை; பருப்புதான் வழங்கி ஆக வேண்டும் என்றால், அனைவருக்கும் பருப்பே கிடைக்கும். சிலருக்கு இறைச்சியும், சிலருக்கு பருப்பும் கொடுப்பது கூடாது.

இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வழிமுறையாக இருந்தன. இவை அவர்களின் நடைமுறையாகவும், அறிவுரை வழங்கும் பாணியாகவும், விருந்தோம்பல் முறைகளாகவும் இருந்தன.

ஹஸ்ரத் சௌத்ரி அப்துர் ரஹீம் ஸாஹிப் (ரலி) அவர்களும் இதேபோன்று எடுத்துரைக்கிறார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் என்னிடம் ஐந்து ரூபாய் வழங்கினார்கள். மேலும், கூறினார்கள்: ஜல்சாவின் நிர்வாகம் உங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது; ஆனால் நினைவில் கொள்ளுங்கள்; அனைத்து நண்பர்களுடனும் ஒரே மாதிரியான நடத்தைதான் இருக்க வேண்டும்; எல்லாருக்கும் ஒரே வகையான உணவுதான் தயார் செய்யப்பட வேண்டும்.

நான் கூறியது போல பொதுவான சூழ்நிலைகளில் வெவ்வேறு உணவுகள் சமைக்கப்படுகின்றன. ஆனால், அந்த நாட்களில் 'ஒரே உணவுதான் சமைக்கப்படும்' என்று அன்னார் (அலை) கூறினார்கள். ஆக, சில நபர்கள் ஹக்கீம் ஃபஸல் தீன் ஸாஹிப் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டார்கள். அவர் அனுபவம் வாய்ந்தவர் ஆவார்; இந்த நிர்வாகத்தை அவரிடம் கொடுங்கள்; அவர் மிகச் சிறந்த முறையில் செய்து விடுவார் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால், ஹுஸூர் (அலை) அவர்கள் எந்தப் பதிலும் அளிக்கவில்லை. மேலும்,'நீங்கள் இந்த ஏற்பாடுகளைச் செய்யுங்கள்' என்று சௌத்ரி அப்துர் ரஹீம் ஸாஹிபிடமே கூறினார்கள்.

அவர் மேலும் கூறுகிறார்: இற்கிடையில் காஜா கமாலுத்தீன் ஸாஹிப் என்னிடம் வந்து, 'எனக்காக சாதம் தயார் செய்து கொடுங்கள்; ஏனெனில், ஹுஸூர் (அலை) அவர்கள் உங்களை உணவிற்கான பொறுப்பில் அமர்த்தியுள்ளார்கள்' என்று கூறத் தொடங்கினார்.

கூறுகின்றார்: நான் அவரிடம் கூறினேன். 'அனைவருக்கும் ஒரே வகையான உணவுதான் தயார் செய்யப்பட வேண்டும் என்று ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களின் கட்டளையும் உள்ளது; எனவே நீங்கள் சாதம் சாப்பிட விரும்பினால், அனுமதி பெற்று வாருங்கள்' என்று கூறினேன். அதற்கு காஜா சாஹிப், 'சோற்றுக்காக நான் போய் அனுமதி கேட்க வேண்டுமா? என்று கூறினார். அதற்கு, 'அப்படியானால் என்னாலும் ஹுஸூர் (அலை) அவர்களின் அனுமதியின்றி ஒரு பருக்கைச் சோறு கூடத் தர முடியாது' என்று நான் கூறினேன். இதனால் அவர் மிகவும் கோபமடைந்தார். மேலும் கூறுகின்றார்: அவர் இங்கு இருந்த வரை என் மீது கோபமாகவே இருந்தார்.(ரிவாயாத்தே அஸ்ஹாப் அஹ்மத் தொகுதி 2, பக்கம் 333)

எப்படியாயினும், விருந்தினர்கள் இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, லங்கர் (விருந்தினர் இல்லத்தின்) ஏற்பாட்டின் கீழ் என்ன உணவு சமைக்கப்படுமோ, எது கிடைத்தாலும், அதனை பொறுமையோடும், நன்றியுடனும் உண்ண வேண்டும். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அழைப்பின் பேரில் நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள் எனும்போது, மேலும், நாம் இங்கு ஆன்மீக உணவைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக நீங்கள் வந்திருக்கும்போது, பின்னர், ஆன்மீக உணவின் பக்கமே அதிக கவனம் இருக்க வேண்டும். உணவில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, கோரிக்கை வைக்கக் கூடாது. சிலர் பெரிய அளவில் கோரிக்கை வைக்கவில்லை என்றாலும், கடை வீதிக்குச் சென்று அங்கு உணவு அருந்த முயல்கின்றனர்; பின்னர் அங்கு கடைகள் நீண்ட நேரம் வரை திறந்திருக்கின்றன. இதனால் நிர்வாகத்திற்கு சிரமத்தை எதிர்கொள்ள நேரிடுகிறது. மேலும், தற்போதைய சூழ்நிலைகளில் குறிப்பாக வறண்ட காலநிலையில் வெளியில் உணவைச் சமைப்பதும், சில சமயங்களில் நள்ளிரவு வரை அமர்ந்திருப்பதும் சரியல்ல. நிர்வாகத்தின் சில பிரிவினர் தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு சென்றுவிடுவதால், முழுமையான கண்காணிப்பு இருப்பதில்லை. இது சில நேரங்களில் பாதுகாப்பற்றதாகிவிடும்.

எனவே விருந்தினர்கள் இந்த மூன்று நாட்களிலும் எது கிடைத்தாலும் அதை அமைதியோடும், நன்றியோடும் உண்ண வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். 'இது எங்களுக்குப் பிடிக்கவில்லை; இதை நாங்கள் சாப்பிட மாட்டோம்' என்பது போன்ற எந்த வெளிப்பாட்டையும் காட்டக் கூடாது.

அதே நேரத்தில், நான் இதையும் கூற விரும்புகிறேன். உணவை ஒருபோதும் வீணாக்காதீர்கள்! உங்களுக்கு எவ்வளவு வழங்கப்படுகிறதோ அல்லது நீங்கள் எவ்வளவு எடுக்கிறீர்களோ, அதில் நீங்கள் சாப்பிட முடிந்த அளவு மட்டுமே எடுங்கள்.

மேலும், நான் கூறியது போன்று, அசல் விஷயம் ஆன்மீக உணவாகும். இதற்காகவே நாம் இந்த ஜல்சாவிற்கு வந்திருக்கிறோம். இங்கு நமது ஆன்மீக வாழ்க்கையை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உணவு என்பதோ அல்லாஹ்வின் அருளால் எப்படியும் கிடைத்துவிடும். மூன்று நாட்கள் வரை ஒரு மனிதன் பொறுமையோடும் நன்றியோடும் குறைந்த அளவிலான உணவை அல்லது பிடிக்காத பொருட்களை உண்பதால் கழித்து விடலாம்.

இதேபோல் ஷேக் ஸைனுல் ஆபிதீன்



சாஹிப் கூறுகிறார்கள்: ஹுஸூர் (அலை) அவர்களின் காலத்தில் விருந்தினர்களுக்கு உணவிற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவது வழக்கமாக இருந்தது. சாதாரண சூழ்நிலைகளிலேயே விருந்தினர்களை உபசரிப்பதில் ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் கவனமாக இருப்பார்கள். எனது சகோதரர் ஹாஃபிஸ் ஹாமித் அலீ (ரலி) ஒருமுறை வருடாந்திர ஜல்ஸா சமயத்தில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிட்டார். அப்போது அரிசி நான்கு பெரிய அண்டாக்களில் சமைக்கப்பட்டு வந்தது. அந்த காலத்தில் நான்கு பாத்திரங்கள் என்பதே மிகவும் அதிகமான அளவு. அவற்றில் இரண்டு பாத்திரங்களில் 'ஸர்தா' எனும் இனிப்புச் சோறும் , இரண்டு பாத்திரங்களில் 'புலாவ்'வும் இருந்தன.

ஒரு நாள் ஹுஸூர் (அலை) அவர்கள் காலையிலேயே சமையலறைக்குச் சென்று, சமையல்காரரிடம் 'மூடியைத் திற, நாம் அரிசியைப் பார்க்க வேண்டும்' என்றார்கள். அவர் மூடியைத் திறந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்களுக்கு அதன் வாசனை பிடிக்கவில்லை. அதில் ஏதோ துர்நாற்றம் வீசுவது போல் அன்னாருக்குத் தோன்றியது. பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் இரண்டாவது பாத்திரத்தையும் திறந்து பார்த்துவிட்டு, ஸர்தா சமைக்கப்பட்ட இரண்டு பாத்திரங்களும் சரியாக இல்லை என்று கூறினார்கள். 'இவற்றை பள்ளத்தில் கொட்டிவிடுங்கள்; இவை மனிதர்கள் சாப்பிடுவதற்கு ஏற்றவை அல்ல' என்றார்கள். மேலும், கூறினார்கள்: 'எனக்கு இதன் வாசனை பிடிக்கவில்லை; இதன் சுவையும் மாறுபட்டுள்ளது. சுவையும் சரியில்லாமல், இதுபோன்ற துர்நாற்றமும் வீசும்போது, அதை சகித்துக் கொள்வது கடினமாகும். அப்படியிருக்க, விருந்தினர்களுக்கு இது எப்படிப் பிடிக்கும்? எனவே எனக்குப் பிடிக்காத ஒரு பொருளை நான் விருந்தினர்களுக்குப் பரிமாற முடியாது. அதனால் இதை பள்ளத்தில் கொட்டி விடுங்கள், வீணாக்க வேண்டாம்; அங்குள்ள விலங்குகள் தின்று கொள்ளட்டும்'.

(ரிவாயத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது, தொகுதி 1, பக்கம் 103)

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவனம் மற்றும் எச்சரிக்கை உணர்வாக இருந்தது. எனவே, உணவு சமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குறிப்பாக இந்த நாட்களில், ஏனெனில் இப்போது கோடைகாலம். நான் ஏற்கனவே கூறியது போன்று, உணவு சரியாகப் பாதுகாக்கப்பட்டு, நீண்ட நேரம் கெட்டுப்போகாமல் இருக்கும் வகையில் உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். குறிப்பாக பருப்பு போன்ற உணவுகள் விரைவில் கெட்டுப் போய்விடும்; அதை நீண்ட நேரம் வைத்து விருந்தினர்களுக்குப் பரிமாறக் கூடாது. இதைக் கவனத்தில் கொண்டு, பரிமாறுவதற்கு முன் உணவை நன்றாகப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

இதேபோல், மற்ற துறைகள் உள்ளன ; அங்கும் ஒவ்வொரு துறையைச் சேர்ந்த ஊழியர்களும் தங்களால் இயன்ற வரை விருந்தினர்களின் வசதியைக் கருத்தில் கொள்ள வேண்டும்.கழிவறை சுத்தப்படுத்தும் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, பார்க்கிங் பிரிவு அல்லது பாதுகாப்புப் பிரிவாக இருந்தாலும் சரி! அங்கு பாதுகாப்பு இருக்க வேண்டும், ஆனால், மக்களிடம் கவனத்துடனும், கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். விருந்தினர்களுக்கு வேதனை தரும் அளவிலான தவறான அணுகுமுறையைக் கைக்கொள்வது பாதுகாப்புப் பணியாளர்களின் வேலை அல்ல. மேலும் என்னிடம் கடுமையான முறையில் பேசப்பட்டுள்ளது என்று விருந்தினர் கருதும் வகையில் அவர்கள் நடந்து கொள்ளக் கூடாது. எனவே நாம் குறிப்பாக இந்த விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்; மேலும் இங்கே மாநாட்டுத் திடலில் அமைதியை பராமரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, அதிலும் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதற்கு எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.பெண்களின் தரப்பிலும் முக்கியமாக இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேபோல், இங்கு ஒன்றுகூடியுள்ள விருந்தினர்களுக்கும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாம் இந்த விஷயத்தை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அதாவது, நாம் பயணத்தின் இன்னல்களைச் சந்தித்து இங்கு கூடியிருக்கிறோம் என்றால், அதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது. சந்தேகமின்றி, இன்றைய பயணச் சிரமங்களும், வேதனைகளும் பழைய காலத்தில் இருந்த அளவுக்கு இல்லை என்றாலும் கூட பயணம் என்பது பயணமே ஆகும். இங்கு வந்திருக்கும் மக்கள், அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருப்பங்களுக்கு கண்ணியமளித்தவாறு, ஜல்ஸாவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே இங்கு வந்திருக்கிறோம்; மேலும், ஜல்ஸாவின் இந்த மூன்று நாட்களில் நாம் பங்கேற்கும்போது, ஜல்ஸா நிகழ்ச்சிகளை முறைப்படி கவனமாகக் கேட்க வேண்டும் என்பதையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்த மூன்று நாட்களையும் அங்கும், இங்கும் அமர்ந்து கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டோ அல்லது அங்கும் இங்கும் சுற்றித் திரிந்தோ கழிக்கக் கூடாது. மாறாக, ஜல்ஸா நிகழ்ச்சி தொடங்கும்போது, உடனே நாம் ஜல்ஸா திடலுக்குள் வந்துவிட வேண்டும் அல்லது எங்கு கூடுதல் ஆட்களுக்காக அல்லது சில குறிப்பிட்ட இடங்களில் எங்கு பெண்களுக்கும், ஆண்களுக்கும், குழந்தைகளுக்கும் அமர்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ, அங்கு அமர்ந்து கண்ணியத்துடன் ஜல்ஸாவைக் கேட்க வேண்டும். அதே போல், குழந்தைகளுடன் பெண்கள் அமர்வதற்காக ஒதுக்கப்பட்ட தனி இடங்களில், பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் அமைதியாக அமர்ந்து ஜல்ஸாவைக் கேட்க வேண்டும். குழந்தைகளுடன் அமர்வது என்பதன் பொருள், பெண்கள் தங்களுக்குள் பேசத் தொடங்கிவிட வேண்டும் என்பதல்ல. முடிந்தவரை முயற்சி செய்யுங்கள். அதாவது, குழந்தையை அமைதிப்படுத்த அல்லது அதனைச் சமாளிக்க பேச நேர்ந்தால் மட்டுமே பேச வேண்டும் என்ற அளவில் முயற்சி செய்ய வேண்டும். ஒருவேளை சிறிய குழந்தை அழத் தொடங்கினால், அதனை அமைதிப்படுத்த எந்த முறையையும் கையாளலாம். ஆனால் தாய்மார்கள் தங்களுக்குள் பேசத் தொடங்கிவிட்டால், அதனால் எப்படியும் பெரும் சத்தம் உருவாகிவிடுகிறது. இது நடக்கக் கூடாது.

ஏனென்றால், அதனால் அங்கு அமர்ந்திருக்கும் மற்ற மக்கள் இடையூறு அடைகிறார்கள். மேலும், குழந்தைகள் குறைவான சத்தத்தையே எழுப்புகிறார்கள்; ஆனால், தாய்மார்கள் தங்களுக்குள் பேசத் தொடங்கி விடுகிறார்கள் என்று பல புகார்களும் வருகின்றன. நாம் குழந்தைகளுக்கான கூடாரத்தில் அமர்ந்திருக்கிறோம் ; எனவே நாம் பேசுவது ஆகுமானது என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால், அது சரியல்ல. குழந்தைகளுடன் வராத மற்ற மக்கள் அமைதியாக ஜல்ஸாவைக் கேட்க வேண்டும்; குழந்தைகளுடன் இருக்கும் தாய்மார்களும் கூட அமைதியாக அங்கு உட்கார்ந்து கேட்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, முடிந்தவரை குறைவாகப் பேசவே முயற்சி செய்ய வேண்டும்.

அதேபோல், ஜல்சா நடக்கும் நேரத்தில் கடைகள் அடைக்கப்படும். ஆயினும், அவ்வாறிருந்தபோதிலும் சாதாரண நேரங்களில் கடைகள் திறந்திருக்கும் போது, அங்கும் விருந்தினர்கள் ஒழுக்கத்தைப் பேண வேண்டும். மேலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மேலும், அங்குள்ள சூழல் பாதிக்கப்படும் வகையில் எந்தவொரு விஷயமும் இருக்கக் கூடாது. பொறுமையோடும், மன உறுதியோடும் தங்கள் பொருட்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சில நேரங்களில் கூட்டம் அதிகமாகிவிடும்; கடை ஒன்றாகத்தான் இருக்கும், ஸ்டாலும் ஒன்றாகத்தான் இருக்கும். இதனால் தாமதம் ஏற்படலாம். ஆனால், இத்தகைய சூழ்நிலையிலும் மக்கள் பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் இந்த ஜல்சாவின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக இருப்பீர்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எத்தகைய அஹ்மதிகளை விரும்பினார்கள்? இது தொடர்பாக அன்னார் (அலை) கூறினார்கள்:

அந்த மக்கள் இறையச்சத்தை மேற்கொள்ளக் கூடியவர்கள் ஆவர்; மேலும், நன்மைகளை செய்யக் கூடியவர்கள் ஆவர். ஏனெனில், இறையச்சம் இன்றி அல்லாஹ் திருப்தி கொள்ள மாட்டான்.' (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 298-299)

எனவே, இங்கு வந்திருக்கும் உங்கள் அனைவரின் முக்கிய நோக்கம் இதுவாகவே இருக்க வேண்டும். அதாவது, நாம் நமது அந்த நோக்கத்தை அடைய வேண்டும்; மேலும், இறையச்சத்தைப் பெற வேண்டும். இதற்காக அமைதியாக அமர்ந்து ஜல்ஸாவைக் கேட்க வேண்டும். ஆண்கள், பெண்கள் என அனைவரும் இதைச் செய்ய வேண்டும். இந்த நோக்கத்தை பெறும்போதுதான் ஜல்ஸாவில் கூறப்படுகின்ற விஷயங்களிலிருந்தும் நீங்கள் பலனடைய முடியும். மேலும், எந்த நோக்கத்திற்காக இந்த ஜல்ஸா நடத்தப்படுகிறதோ அது நிறைவேறும்போதும்தான் பயனடைய

முடியும்.

இதற்காக, இங்கு வந்திருக்கும் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் அன்போடும், அரவணைப்போடும் சந்தியுங்கள். ஸலாத்தைப் பரப்புங்கள். ஜல்ஸாவில் எங்கும் அஸ்ஸலாமு அலைக்கும் ( என்று கூறும்) சூழல் இருக்க வேண்டும்.

ஜல்ஸாவின் நிகழ்ச்சி முடிந்த பிறகு நீங்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது, அன்போடும், பாசத்தோடும் சந்தியுங்கள். யாருடனாவது ஏதாவது பழைய பகைமைகளும் இருந்தால் அதை அகற்றி விடுங்கள். மேலும், சூழலில் சலசலப்பு ஏற்படும் வகையிலான எந்தச் செயலையும் நாம் செய்யக் கூடாது. இதற்காக இயன்ற வரை முயற்சி செய்யுங்கள். சில மக்களிடத்தில் சகிப்புத் தன்மை இருப்பதில்லை. அப்படிப்பட்ட மக்களும் உள்ளனர். 100 சதவீத மக்கள் மிகுந்த சகிப்புத்தன்மையும், தைரியமும் கொண்டவர்கள் என்று கூற முடியாது. சில நேரங்களில் மக்களிடம் சகிப்புத்தன்மை குறைவாகவே இருக்கின்றது. ஆனால், அவர்கள் இந்த நாட்களில் இறையச்சத்துடன் செயல்பட்டு, தங்களுடைய சகிப்புத்தன்மையை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முயற்சி செய்யுங்கள்; தனிப்பட்ட பகைமைகளை முடிவுக்குக் கொண்டு வாருங்கள் அல்லது குறைந்தபட்சம் அந்தத் தனிப்பட்ட பகைமைகளை சூழலில் சங்கடத்தை உண்டாக்கும் காரணியாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மேலும், நிர்வாகத்தையும் சிரமத்தில் ஆழ்த்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

எப்போதும் நினைவில் வையுங்கள். எந்த நல்ல நோக்கத்திற்காக வந்துள்ளீர்களோ, அதைத்தான் நீங்கள் நிறைவேற்ற வேண்டும். இது இல்லையெனில், பின்னர் எந்தப் பயனும் இருக்காது.

இங்கு தொழுகைகளுக்கு முறையான ஏற்பாடுகளோ இருக்கின்றன. ஆனால், தங்கும் இடங்களில் நீண்ட காலம் தங்கியிருப்பவர்கள், ஜமாஅத் தங்குமிடத்தில் தங்கியிருப்பவர்கள் ஜல்ஸாவிற்குப் பிறகும் தொழுகைகளில் முறையான கவனம் செலுத்த வேண்டும் மற்றும் ஜமாஅத்தாக தொழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இந்த நாட்களில் கூடாரங்களிலோ அல்லது திடல்களிலோ தங்கியிருக்கும் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், இங்கு இந்த மூன்று நாட்களில் தஹஜ்ஜுத் தொழுகையும் நடைபெறுகிறது. தஹஜ்ஜுத்திற்கு எழுப்பப்படும் போது எழ வேண்டும். இதில் சிறப்பு கவனம் செலுத்துவதிலும், தொழுகைகளை தவறாமல் நிறைவேற்றுவதிலும் தான் நன்மையே உள்ளது.

தஹஜ்ஜுத் தொழுகைக்கும் சிறப்பு முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் நீங்கள் இங்கு வந்ததன் நோக்கமே அதுதான். இது உங்களுக்குக் கிடைத்துவிட்டால், நீங்கள் அனைவரும், உங்களுடைய மற்றும் உங்களுடைய சந்ததியினரின் வாழ்க்கையைச் சீரமைத்துக் கொண்டவர்களாக ஆகிவிடுவீர்கள்.

இதேபோல், பார்க்கிங் போன்றவை தொடர்பாகவும் கவனமூட்டி விடுகிறேன். அதாவது, பார்க்கிங்கிலும் நிர்வாகம் எவ்வாறு வழிகாட்டுகிறதோ அதற்கேற்ப காரை பார்க் செய்யுங்கள். கார்ட்கள் போன்றவற்றை சோதித்துப் பார்க்கும் நேரத்தில், அங்கும் ஒரு நீண்ட வரிசை (Queue) நிற்கிறது என்றால், எச்சரிக்கையுடனும், பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும் உங்கள் முறைக்காகக் காத்திருந்து பரிசோதனை செய்து கொண்டு வாருங்கள். அவசரப்பட வேண்டாம். விருந்து உபசரிப்பவர்களுக்கோ அல்லது நிர்வாகத்தினருக்கோ விருந்தினர்கள் எந்தவொரு சிரமத்திற்கும் காரணியாக ஆகக் கூடாது.

அதேபோன்று, விருந்தினர்களும், பணியில் உள்ளவர்களும் மற்றொரு விஷயத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்; அதாவது, குறிப்பாக இன்றைய நாட்களில், நாட்டின் நிலைமைகள் இருக்கின்றன. அந்நியர்களிடத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக சிலமுறை காணப்படும் வெறுப்பு மற்றும் பகைமை காணப்படுகிறது. அதனைக் கருத்தில் கொண்டு, சூழ்நிலையை உன்னிப்பாகக் கவனியுங்கள். மேலும் எச்சரிக்கையாக இருங்கள். ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பொருள் அல்லது நபரைக் கண்டால், உடனடியாக நிர்வாகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்; மேலும் கூட்டத்தில் அமர்ந்திருக்கும் போதும் ஒருவர் மற்றவர் மீது பார்வை வையுங்கள்.

அதேபோல், இன்றைய நாட்களில் குறிப்பாக வானிலை மிகவும் வறண்டு காணப்படுகிறது. எனவே, தீப்பிடிக்கும் அபாயமும் உள்ளது. எனவே, தனிப்பட்ட அல்லது பொதுவான தங்குமிடங்களில் எந்த வகையான தீயையும் மூட்ட வேண்டாம். தீக்குச்சியைக் கொளுத்த வேண்டாம். அதற்கான தேவை ஏற்பட்டால், நிர்வாகத்தைத் தொடர்புகொண்டு, அவர்கள் ஏற்பாடு செய்துள்ள இடத்திற்குச் செல்லவும். அங்கு தீ மூட்டப்பட்டால் பிரச்சனையில்லை. ஆனால் எல்லா இடங்களிலும் அமர்ந்து கொண்டு எந்த வகையான தீப்பொறியை உருவாக்குவதையும் தவிர்க்கவும். எச்சரிக்கையாக இருக்கவும்; ஏனெனில் அதன் காரணமாக ஏதேனும் விபத்தும் நிகழக் கூடும்.

அதேபோல், பழைய கார்களை வைத்திருப்பவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நேற்று நான் ஊழியர்களிடம் கூறியிருந்தேன். பழைய கார்களைக் கொண்டுவரும் ஏராளமான விருந்தினர்கள் இருக்கின்றனர். அவற்றின் என்ஜின்கள் சூடாகிவிடுகின்றன; அவை புல் உள்ள இடத்தில் நிறுத்தப்பட்டால், அங்கு தீப்பிடிக்கும் அபாயம் உள்ளது. அதேபோல், சில சமயங்களில் சில பழைய கார்களிலிருந்து எண்ணெய் வடிகிறது. எனவே அவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், மேலும் பார்க்கிங் செய்யும் போது நிர்வாகத்திடம் 'என் காரில் இந்தக் கோளாறு உள்ளது; எனவே காரைப் பாதுகாப்பான இடத்தில் நிறுத்துங்கள் என்று தெரிவித்து விட வேண்டும்.

தூய்மையையும் கருத்தில் கொள்ளுங்கள். எங்கு நிர்வாகம் கழிப்பறைகள் போன்றவற்றைத் தூய்மைப்படுத்த முயற்சிக்கின்றதோ, அங்கு நீங்களும் குளியலறைகளைப் பயன்படுத்தும்போது, அதைத் தூய்மைப்படுத்திவிட்டு வர வேண்டுமே தவிர, தரையில் நீர் வழிந்தோடவோ, அழுக்குகள் சேர விடவோக் கூடாது. ஹதீஸின் கூற்றுப்படி தூய்மையில் கவனம் செலுத்த விருந்தினர்களும் முயற்சிக்க வேண்டும்; ஏனெனில், 'தூய்மை ஈமானின் ஒரு பகுதியாகும்'. நாம் அனைவரும் இங்கு நமது ஈமானை வளர்த்துக் கொள்ளவே வந்துள்ளோம். எனவே தூய்மையின் அம்சத்தையும் புறக்கணிக்கக் கூடாது.

ஒவ்வொருவரும் இந்த நாட்களில் தங்களை ஊழியர்களாக கருதிக் கொள்ள வேண்டும்; மேலும் சூழலும் தூய்மையாக இருக்கும் வண்ணம் தூய்மையின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும், .

உங்கள் ஈமானின் தரத்தை உயர்த்துவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். இந்த நாட்களில் இறை தியானத்தில் அதிக அழுத்தம் கொடுங்கள். ஓய்வு நேரங்களில் எங்கு அமர்ந்திருக்கின்றீர்களோ அங்கு துரூத் ஷரீஃப், துஆக்கள் மற்றும் இஸ்திஃக்ஃபார் ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துங்கள். வீண் பேச்சுக்களைப் பேசுவதற்குப் பதிலாக, இறை தியானத்திலோ அல்லது மார்க்க உரையாடல்களிலோ ஈடுபடுங்கள்.

இதேபோல், இந்த நாட்களில் சில கண்காட்சிகளும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிடவும் நீங்கள் செல்ல வேண்டும்; ஆர்வத்துடனும், கவனத்துடனும் பார்வையிடுங்கள். இது உங்களுக்குப் பயனுள்ளதாகவும் இருக்கும். கல்வி ரீதியாகவும் பயனளிக்கும். மார்க்க ரீதியாகவும் பயனளிக்கும்.

எனவே, இந்த விஷயங்கள் இருக்கும் என்றால், இன்ஷா அல்லாஹ் நீங்கள் இந்த மாநாட்டின் மூலமாக முழுமையான பயனடைபவர்களாக இருப்பீர்கள். நீங்கள் அனைவரும் இந்த ஜல்ஸாவில் அனைத்து விதத்திலும், மார்க்க ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பயனடைபவர்களாக இருக்க அல்லாஹ் அருள் செய்வானாக! கல்வி ரீதியாகவும் பயனடைபவர்களாக இருப்பீர்கள். மேலும், ஜல்ஸாவின் அருள்கள் எப்போதும் உங்கள் வாழ்வின் அங்கமாகத் தொடரட்டும்! மேலும், உங்கள் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்விலும் அங்கமாகத் தொடரட்டும்! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் எதுவோ, அதை நிறைவேற்றுபவர்களாக நீங்களும் இருக்க வேண்டும்.

இன்ஷா அல்லாஹ் மாலையில் ஜல்ஸா முறைப்படியாக தொடங்கும். அந்த உரையையும், மீதமுள்ள சொற்பொழிவாளர்களின் உரைகளையும் கவனமாகக் கேளுங்கள். மேலும், அவற்றின்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் தஆலா அனைவருக்கும் இதற்கான நற்பேறு புரிவானாக! (அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 14 ஆகஸ்ட் 2026, பக்கம் 2 முதல் 7)

தமிழாக்கம்

முரப்பி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

# ஜுமுஆ பேருரை

## ஜல்ஸா ஸாலானா யூ.கேவில் கலந்து கொண்ட கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் கருத்துகள் மற்றும் தொண்டாற்றியவர்களுக்கு நன்றி கூறுதல்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 31 ஜுலை 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **வஃபா** மாதம் **31 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

அல்லாஹ்வின் அருளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூன்று நாள் ஆண்டு மாநாடு, அல்லாஹ்வின் அருள்களைச் சேகரித்தவாறு தன் நிறைவை எட்டியது. மாநாட்டின் ஆயத்தப் பணிகளுக்குப் பல மாதங்கள் ஆகின்றன; சொல்லப்போனால், மாநாடு முடிந்தவுடனேயே அடுத்த ஆண்டின் ஆயத்தப் பணிகள் தொடங்கிவிடுகின்றன. இதற்கான முழு வேகம் மாநாட்டிற்குச் சில வாரங்களுக்கு முன்பே தொடங்குகிறது. ஆனால் மாநாட்டிற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்பு இது உச்சக்கட்டத்தை அடைகிறது. மாநாட்டின் நாட்களில் ஆயிரக்கணக்கான தன்னார்வப் பணியாளர்கள் - சிறுமிகள், பெண்கள், சிறுவர்கள், ஆண்கள், முதியவர்கள், இளைஞர்கள் - தங்களின் முழு திறமையோடும் மனத்தூய்மையோடும் எல்லா நேரங்களிலும் தொண்டாற்றுகிறார்கள். இவர்கள் அஹ்மதி விருந்தினர்களுக்கு வசதிகளை ஏற்படுத்துவது மட்டுமின்றி, மாநாட்டிற்கு வருகை தரும் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஜமாஅத்தைச் சாராத, முஸ்லிம் அல்லாத விருந்தினர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதோடு, இஸ்லாத்தின் உண்மையான தோற்றத்தை வெளிப்படுத்தி ஒரு மௌனமான தப்லீக்கையும் செய்கிறார்கள். ஆகவே, இந்த அடிப்படையில் மாநாட்டின் எந்தவொரு துறையில் பணியாற்றிய பணியாளர்களாக இருந்தாலும் சரியே! அவர்கள் அனைவரும் நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள். அவர்கள் செய்யும் இந்த சேவைக்குச் சிறந்த நற்கூலியை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக!

இவ்வாறே, மாநாட்டில் நேரடியாகத் தொண்டாற்றும் பணியாளர்கள் மட்டுமின்றி, எம்.டி.ஏ பணியாளர்களும் இதில் அடங்குவர்; அவர்களில் பலர் தன்னார்வலர்கள் ஆவர். மாநாட்டு நிகழ்ச்சிகளை உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கு வரை கொண்டு சேர்ப்பதற்காக முழு முயற்சி செய்த இவர்களும் நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள். இதுவும் தப்லீஃக்கிற்கான ஒரு மிகப் பெரிய வழிமுறையாகும்.

இதேபோல், செய்திகளைக் கொண்டு சேர்ப்பதில் பிரஸ் அண்ட் மீடியாவும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. இதில் தலைமையக பிரஸ் துறையும் அடங்கும்; யூ.கே-வின் பிரஸ் துறையும் அடங்கும். கோடிக்கணக்கான மக்களுக்கு இத்தூதுச்செய்தி சென்றடைந்தது. இதில் பெண்களும் ஆண்களும் - அனைவரும் அடங்குவர். இவ்வாறே, ஒவ்வோர் ஆண்டைப் போலவும் இவ்வாண்டும் இங்குள்ள பணியாளர்களுக்கு உதவுவதற்காக குத்தாமுல் அஹ்மதிய்யா கனடாவைச் சேர்ந்த ஏராளமான தன்னார்வலர்கள் வந்துள்ளனர். அவர்கள் மாநாட்டிற்குப் பிறகு அப்புறப்படுத்தும் பணிகளை, மாநாட்டை Wind up செய்யும் பணிகளைச் செய்கிறார்கள். இப்போது ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களும் வரத் தொடங்கியுள்ளனர். இவர்கள் மிகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்; இவர்கள் அனைவரும் நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் நற்கூலியை வழங்குவானாக!

எவ்வாறிருப்பினும், பணியாற்றுபவர்கள் மூலம் அந்நியர்கள் மீது ஏற்படும் தாக்கத்தின் காரணமாக ஜமாஅத் மற்றும் இஸ்லாத்தின் உண்மையான தோற்றம் அவர்கள் முன் வெளிப்படுகிறது; இதனால் அவர்கள் மிகவும் கவரப்படுகிறார்கள். எண்ணற்ற கருத்துகளை அவர்கள் எழுதி அனுப்புகிறார்கள்; நன்றியும் தெரிவிக்கிறார்கள். நான் தேர்ந்தெடுத்துள்ள சில கருத்துகளை இப்போது முன்வைக்கிறேன்; ஒருவேளை அந்த சில கருத்துகளைக் கூட முழுமையாக முன்வைக்க முடியாமல் போகலாம்.

எவ்வாறிருப்பினும், சிலவற்றை முன்வைக்கிறேன். இவ்வாறே, நானும் அனைத்து ஆண், பெண் பணியாளர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்; அவர்கள் மிகவும் தன்னலமின்றி தொண்டாற்றினார்கள். ஆனால் அதே நேரத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் தங்களுக்கு வழங்கினான் என்பதற்காக அவர்களும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். மக்கள் உங்களிடம் நன்றியுணர்வை வெளிப்படுத்துவதைக் கண்டு நீங்கள் மேலும் பணிவுடையவர்களாக மாற வேண்டும்; அல்லாஹ்வின் முன் மேலும் குனிந்து அவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக மாற வேண்டும். அல்லாஹ் இதற்கும் உங்களுக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக!

நான் முன்பு கூறியது போல், சில கருத்துகளை இப்போது முன்வைக்கிறேன். அதில் முதலாவதாக என் முன் இருப்பது கேம்பியாவின் தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சரான லாமின் ஜாபி சாஹிப் அவர்களின் கருத்தாகும். அவர் கூறுகிறார்:

ஆண்டு மாநாட்டைக் கண்டு நான் அதன் ஆழமான உண்மையால் வியப்பில் மூழ்கிப்போனேன். இது சுயநலமற்ற சேவையினாலும், அமைதியானத் தளராத தியாகத்தினாலும் கட்டமைக்கப்பட்ட ஒரு மகத்தான உலகளாவிய கூட்டமாகும். இவ்வளவு பெரிய அளவிலான இந்த மாநாடு காதியானில் வெறும் 75 பேருடன் தொடங்கியது என்பதும், இன்று நிர்வாக ரீதியாக ஒரு தலைச்சிறந்த, வியக்கத்தக்க படைப்பாக உருவெடுத்துள்ளது என்பதை அறியும்போது உள்ளம் ஆழமாக ஈர்க்கப்படுகிறது. செயற்கைக்கோள் மூலமாக உலகின் இருநூறு நாடுகளுக்கு இது ஒளிபரப்பப்படுகிறது; நிர்வாகத்திற்கு எவ்விதக் காவல்துறையின் தேவையும் இல்லை என்பதும் என்னை மேலும் வியப்படையச் செய்கிறது. எந்தவொரு பௌதிக பேராசையும் இல்லை. கார்ப்பரேட் அதிகாரிகள், மருத்துவர்கள், இளைஞர்கள் தங்கள் உலக பதவிகளை ஒருபுறம் வைத்துவிட்டுத் தன்னார்வத் தொண்டர்களாகத் தரையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள்; நெருப்பில் உணவு சமைத்துக் கொண்டிருந்தார்கள்; போக்குவரத்தைச் சீரமைத்துக் கொண்டிருந்தார்கள்; தொழுகைக்காக பாங்கு கூறப்பட்டபோது, பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த இந்த உத்வேகமுள்ள கூட்டம் உடனடியாக எந்த அளவிற்கு முழுமையான அமைதியை மேற்கொண்டதென்றால், ஓர் ஊசி விழும் சத்தம் கூடக் கேட்கும் அளவுக்கு அமைதி நிலவியது! இக்காட்சி, எனக்குக் கூட்டு ஒழுங்கமைப்பைப் பற்றியும் ஆன்மிகத் தொடர்பைப் பற்றியும் ஓர் உயிருள்ள உணர்வைக் கொடுத்தது; அது இன்றைய பௌதிக உலகில் நடைமுறையில் எங்குமே காணக்கிடைக்காத ஒன்றாகும்.‘

பிறகு அவர் கூறுகிறார்:

கண்ணீர் வடிக்கும் மனிதச் சங்கிலி ஆயிரக்கணக்கான மக்களை உலகளாவிய

பைஅத் நிகழ்ச்சியின் மூலமாக அவர்களின் இமாமுடன் இணைத்தது என்றால் அதில் நான் கலந்து கொண்டது அதன் தனித்துவமான தொடர்பின் காரணமாக எனக்கு நம்ப முடியாத ஒன்றாக இருந்தது. ஜமாஅத்தின் மகத்தான உலகளாவிய தாக்கம் எந்தவோர் உலகச் செல்வத்தினாலோ அல்லது அரசியல் நோக்கங்களினாலோ உருவானது அல்ல; மாறாக, முழுமையான இறையச்சத்தோடும் அமைதியின் உண்மையான நடைமுறைச் செய்தியோடும் கொண்ட பிணைப்பின் பலனாகும் என்பதே என் மனதில் என்றும் நிலைத்திருக்கும் தாக்கமாகும்.'

நைஜீரியாவிலிருந்து ஒரு மாநிலத்தின் அரசர் - கிட்டத்தட்ட பாதி மாநிலம் இவரது நிர்வாகத்தின் கீழ் உள்ளது - கோபா கஹண்டே வோலே பாடே வோலே அவர்கள் கூறுகிறார்:

நான் யூ.கே. ஆண்டு மாநாட்டில் பங்கேற்பதற்காகப் புறப்பட்டபோது, என் வாழ்க்கையில் இவ்வளவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு மகத்தான, ஒழுங்கமைக்கப்பட்ட, ஆன்மிகக் கூட்டத்தின் ஓர் அங்கமாக ஆகப்போகிறேன் என்று நான் சிறிதும் எண்ணியிருக்கவில்லை. இங்கு வந்தடைந்த பிறகு, நான் அசாதாரணமான ஒழுக்கம், சகோதரத்துவம், படைப்பினத் தொண்டு ஆகியவற்றின் நடைமுறை முன்மாதிரியைக் கண்டது மட்டுமின்றி, உலகின் பல்வேறு நாடுகளையும் கோத்திரங்களையும் சேர்ந்த மக்கள் அன்பு, மரியாதை, சகோதரத்துவப் பிணைப்பில் இணைந்திருப்பதையும் கண்டேன். எங்களுக்கு மிகவும் தூய்மையான உள்ளத்தோடு விருந்தோம்பல் செய்யப்பட்டது; அது எப்போதும் எங்கள் நினைவுகளின் ஒரு பகுதியாக இருக்கும்.'

மேலும், அவர் கூறுகிறார்:

எனக்கு நிறைய கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது; ஆனால், மறக்க முடியாத தருணம் ஜமாஅத்தின் இமாமைச் சந்தித்ததும், அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டதுமாகும். அவற்றைக் கேட்டு நான் நிறைய கற்றுக் கொண்டேன்; அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய வளர்ச்சியைக் குறித்த அறிக்கையையும் கேட்டேன். அதுவும் மிகவும் வியப்பளிப்பதாக இருந்தது.'

அவர் கூறுகிறார்:

'எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் வெறுப்பு இல்லை எனும் உங்களின் முழக்கம், வெறும் முழக்கம் மட்டுமல்ல, மாறாக, அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நடைமுறை அடையாளமாகும். உலகம் இந்த அன்பு, சகிப்புத்தன்மை, மனிதநேய மரியாதை எனும் உணர்வை ஏற்றுக்கொண்டால், சந்தேகத்திற்கிடமின்றி உலகம் அமைதி பூங்காவாக மாறக்கூடும்.'

பிறகு கூறுகிறார்:

' உலகின் பல்வேறு மொழிகளில் நேரலையாக ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளும் என்னை மிகவும் வியப்படையச் செய்தன.'

இவ்வாறே, அவருடைய இளவரசியாகிய அவரது மனைவியும் இதே உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்; அவர் கூறுகிறார்:

'பெண்களுக்காகச் செய்யப்பட்டிருந்த முன்மாதிரியான ஏற்பாடுகள், அவர்களின் மரியாதை, சுதந்திரம், கண்ணியமிக்க சூழல் ஆகியவற்றைக் கண்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சியான ஆச்சரியம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான பெண்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வருவதையும் செல்வதையும், முழுமையான கண்ணியத்துடன் மாநாட்டில் பங்கேற்பதையும் கண்டபோது இஸ்லாத்தைப் பற்றிய எனது பல எண்ணங்கள் மாறிவிட்டன. அஹ்மதிய்யா ஜமாஅத் இஸ்லாமியப் போதனைகளின்படி பெண்களின் மரியாதையையும், அவர்களின் உரிமைகளையும் நடைமுறை வடிவில் வெளிப்படுத்தியுள்ளது என்பதை நான் உணர்ந்தேன்.'

செனிகலைச் சேர்ந்த ஒரு விருந்தினரான செயிண்ட் லூயிஸின் முன்னாள் ஆளுநர் அலியூன் பத்ரா சாம் சாஹிப் கூறுகிறார்:

என்னை மிகவும் கவர்ந்த விஷயம், மிகச் சிறந்த நிர்வாக அமைப்பாகும். பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தபோதிலும், மாநாட்டின் ஏற்பாடு மிகவும் சிறப்பான முறையில் செய்யப்பட்டுள்ளது என்பதை தெளிவாக உணர முடிந்தது. போக்குவரத்து வசதிகளும் சிறப்பாக இருந்தது; தன்னார்வலர்கள் இன்முகத்தோடும், எப்போதும் தயார் நிலையிலும் இருந்தனர்.'

மேலும் கூறுகிறார்:

நான் அனைத்து சொற்பொழிவுகளையும் கவனமாகக் கேட்டேன்.'

இப்போது அந்நியர்களும் சொற்பொழிவுகளின் போது சும்மா அமர்ந்திருப்பதில்லை; மாறாக, நாங்கள் கவனமாகக் கேட்டோம் என்று கூறுகிறார்கள்.

அவர் கூறுகிறார்; 'பல்வேறு மொழியாக்கங்களுக்கான ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக இருந்தன; இதன் காரணமாக அனைத்து சொற்பொழிவுகளையும், செய்திகளையும் எங்களால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. முழு மாநாட்டின் போதும் மீண்டும், மீண்டும் எடுத்துரைக்கப்பட்ட செய்தி அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தின் செய்தியாகும்.'

இவ்வாறே, ராதோ தூத்தா சாஹிப் - இவர் லக்சம்பர்க்கைச் (luxembourg) சேர்ந்த ஒரு வழக்கறிஞராக, பாரிஸ்டராக (Barrister) ஆக உள்ளார் - தம் மகனுடன் முதன்முறையாகப் பங்கேற்றிருந்தார். அவர் கூறுகிறார்:

'மாநாட்டின் இந்த மூன்று நாட்களும் என் வாழ்க்கையின் மிக முக்கியமான நாட்களாக மாறிவிட்டன. இவ்வளவு பெரிய, ஒழுங்கமைக்கப்பட்ட, கண்ணியமான ஓர் இஸ்லாமியக் கூட்டத்தை நான் முதன்முறையாகப் பார்க்கிறேன். இவ்வளவு பெரிய எண்ணிக்கை இருந்தபோதிலும், முழு நிர்வாகமும் தன்னார்வலர்கள் மூலம் மிகவும் அழகிய முறையில் இயங்கிக்கொண்டிருந்தது. பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த மக்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களைப் போல எனக்குத் தோன்றியது. ஒவ்வொரு தன்னார்வலரும் புன்னகையுடன் விருந்தினர்களுக்குச் சேவை செய்வதில் ஈடுபட்டிருந்தனர். பணியில் இருந்த ஒவ்வோர் ஊழியரும் ஒவ்வொரு விருந்தினரிடமும் அவரே மிகவும் முக்கியமானவர், கண்ணியத்திற்குரியவர் என்பது போன்ற அன்போடும், மரியாதையோடும், கவனத்தோடும் நடந்துகொண்டனர்.'

உலகளாவிய பைஅத்தின் காட்சியும் விருந்தினர்களை மிகவும் ஈர்க்கிறது.

பிறகு அவர் கூறுகிறார்: 'உலகளாவிய பைஅத்தின் ஆன்மாவை உருக்கும் அக்காட்சி என்னால் மறக்க முடியாத ஒன்றாக இருந்தது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே இமாமின் கைகளில் பைஅத் செய்வதையும், மிகவும் பணிவோடு இறைவனின் முன் துஆ செய்வதையும் கண்டது என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய, ஈமானை ஒளிரச் செய்யும் ஆன்மிக அனுபவமாகும்.'

பிறகு அவர் கூறுகிறார்:

'ஜமாஅத்தின் இமாமையும் நான் சந்தித்தேன்; ஆரம்பத்தில் எனக்குப் பதற்றமாக இருந்தது, ஆனால் அவர்களைச் சந்தித்த பிறகு என் பதற்றம் நீங்கிவிட்டது. இவ்வாறே, என் உள்ளத்தில் இருந்த விஷயங்கள், என் உணர்வுகள் குறித்து நான் அவர்களிடம் கேட்க விரும்பினேன்; ஆனால் நான் கேட்பதற்கு முன்பே, அந்த விஷயங்களை அவர்களே என்னிடம் கேட்டு அதற்கான பதிலையும் கூறிவிட்டார்கள்.'

பிறகு புதிதாக பைஅத் செய்த எலைஜா கேப்ரியல் சாஹிப் கூறுகிறார்:

'இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் நான் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவனாக இருந்தேன். ஈமானுக்கு இசையுடன் தொடர்பு உண்டு என்றே எங்களுக்கு எப்போதும் கற்பிக்கப்பட்டு வந்தது.'

இன்றைய உலகிலும் இசை அவசியமானது எனும் இத்தகைய போக்கு மிகவும் அதிகரித்துவிட்டது.

அவர் கூறுகிறார்: 'ஆனால் என்னால் ஒருபோதும் இந்த முறையில் உண்மையான ஆன்மிக அமைதியையோ, இறை நெருக்கத்தையோ உணர முடிந்ததில்லை. முஸ்லிமான பிறகும் நான் தொழுகைகளைத் தொழுது வந்தேன். ஆனால் அழுகையோடு கூடிய துஆவிற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை; ஆனால் ஆண்டு மாநாட்டில் பைஅத்தில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தபோது, என்னால் வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஓர் ஆன்மிக நிலை என் மீது ஏற்பட்டது. தொடர்ந்து என் பாவங்களை எண்ணி வருந்தி இஸ்திஃக்ஃபார் செய்து கொண்டே இருந்தேன்; துஆக்கள் செய்துகொண்டே இருந்தேன்; என் கண்களிலிருந்து தன்னிச்சையாகக் கண்ணீர் வழிந்துகொண்டே இருந்தது. கிலாஃபத்துடன் எனக்கு ஓர் ஆன்மிகத் தொடர்பு ஏற்பட்டது; அல்லாஹ்வுடன் ஓர் ஆன்மிகத் தொடர்பு ஏற்பட்டது. அதற்குப் பிறகு தொழுகை நடைபெற்றது; தொழுகையிலும் இந்த ஆன்மிக நிலை என் மீது நீடித்திருந்தது. அதே நிலையில் நான் மாநாட்டுத் திடலை விட்டு வெளியே சென்றேன்; என் காலணிகளை அணிய மறந்துவிட்டேன் என்ற உணர்வு கூட எனக்கு இருக்கவில்லை. அதே நிலையில் கழிப்பறைக்குச் சென்றேன்; அங்கு நின்று கொண்டிருந்த ஒரு தன்னார்வலர் என் கால்களைப் பார்த்துவிட்டு, தம் காலணியைக் கழற்றி எனக்குக் கொடுத்து, 'நீங்கள் இதை அணிந்து கொள்ளுங்கள். வெறுங்காலுடன் உள்ளே சென்றால் உங்களுக்குச் சிரமமாக

இருக்கும்' என்றார்.'

அவர் கூறுகிறார்:

'இந்தச் சிறிய சம்பவம் என் ஈமானை மேலும் உறுதியாக்கியது; நிச்சயமாக இது இறைவனால் நிறுவப்பட்ட ஒரு ஜமாஅத் ஆகும்; இங்கு ஒவ்வொரு நபரும் தன் சகோதரனுக்கு உதவுவதற்கு எப்போதும் ஆயத்தமாக இருக்கிறார்கள்.'

ஆகவே, அஹ்மதித் தன்னார்வலர்களும், பணியாளர்களும் விருந்தினர்களை இவ்வாறு கவனத்தில் கொள்வது மக்களின் ஈமானையும் உறுதியாக்குகிறது.

செக் குடியரசிலிருந்து பேராசிரியர் யாரோஸ்லாவ் ஃப்ரான்க் சாஹிபும், மற்றொரு பேராசிரியரான மார்க் சாய்க்கா சாஹிபும் வந்திருந்தனர். அவர்கள் கூறுகிறார்கள்:

'ஆண்டு மாநாடு எங்களுக்கு எந்த அளவிற்குப் பிடித்திருந்தது என்றால், எங்களால் எங்கள் உணர்வுகளை விவரிக்க இயலவில்லை. மீண்டும் செக் குடியரசுக்குச் சென்று எங்கள் மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் நாங்கள் கூறக்கூடிய விஷயம் என்னவென்றால், ஆன்மிகம் நிறைந்ததாகவும் மிக உயரிய ஏற்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டதாகவும் இருந்த இந்த மகத்தான சபையின் அனுபவத்தை நீங்கள் அனைவரும் நேரில் வந்து பெற வேண்டும் என்பதே ஆகும். உலகின் பல்வேறு மூலைமுடுக்குகளைச் சேர்ந்த மக்கள் அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவ உணர்வோடு ஒரே இடத்தில் கூடியிருந்தனர். இறைவணக்கத்திற்குப் பிறகு மக்களுடனான சந்திப்பு அனுபவம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவும், கவரக்கூடியதாகவும் இருந்தது. ஒரே நம்பிக்கையானது உலகம் முழுவதிலும் உள்ள மக்களை அன்பு, அமைதி மற்றும் ஒற்றுமைப் பிணைப்பில் இணைக்கிறது என்பதைக் கண்டு பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.'

அவர்கள் கூறுகிறார்கள்:

'கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவிற்குப் பிறகு எங்களுக்கு இஸ்லாத்தைப் பற்றியும் இறையச்சம் பற்றியும் உண்மையான புரிதல் கிடைத்தது. இந்த தலைப்பைப் பற்றி ஆழமான புரிதலையும் அறிவையும் நாங்கள் பெற்றோம். இவ்வாறே எம்.டி.ஏ மூலமாக உலகிற்கு வழங்கப்பட்ட ஒளிபரப்பு ஏற்பாடுகளும் வியப்பளிப்பதாக இருந்தன.

கஜாகஸ்தானிலிருந்து (Kazakhstan) சாவ்லே சாஹிபா மாநாட்டில் பங்கேற்றிருந்தார். அவர் கூறுகிறார்:

' இது, என் உள்ளத்தில் மிகவும் மகிழ்ச்சியான, ஆழமான தாக்கங்களை ஏற்படுத்திய ஆன்மாவை உருக்கும், மறக்க முடியாத கூட்டமாகும்.'

அவர் கூறுகிறார்:

'ஜமாஅத்தின் இமாம் மற்றும் இதர பேச்சாளர்களின் சொற்பொழிவுகளில் ஈமான், உயரிய நல்லொழுக்கம், அமைதி, பரஸ்பர நல்லிணக்கம், குடும்ப மதிப்புகள், இளைஞர்களின் தர்பிய்யத் மற்றும் சமூக சேவை போன்ற முக்கியமான தலைப்புகள் குறித்து வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டது. பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த மக்களிடையே நிலவிய சகோதரத்துவச் சூழலும், அவர்கள் பேசிய அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான விஷயங்களுமே என்னை மிகவும் கவர்ந்தன.'

பிறகு அமெரிக்காவிலிருந்து சட்டப் பேராசிரியரான டாக்டர் பேராசிரியர் பிரேட்ஷாஃப் சாஹிபும் வந்திருந்தார். அவர் கூறுகிறார்:

'எனக்கு உலகம் முழுவதும் பல்வேறு சர்வதேச மாநாடுகளிலும், அமைப்புகளின் கூட்டங்களிலும் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது; ஆனால் யூ.கே. ஆண்டு மாநாட்டின் அனுபவம் இவை அனைத்திலிருந்தும் தனித்துவமானது. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்திருந்த மக்கள், பல்வேறு மார்க்கங்கள், சமுதாயங்கள் மற்றும் வாழ்வின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த விருந்தினர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இங்கு காணக் கிடைத்த அன்பு, மரியாதை, அமைதி மற்றும் பரஸ்பர சகோதர சூழல் உண்மையிலேயே அசாதாரணமானது என்பதே அவர்கள் அனைவரின் ஒரே கருத்தாக இருந்தது.'

மேலும், அவர் கூறுகிறார்:

'ஹியுமேனிட்டி ஃபர்ஸ்ட் (Humanity First) மற்றும் பல்வேறு கல்வி மற்றும் வரலாற்றுச் சார்ந்த கண்காட்சிகள் என்னை மிகவும் கவர்ந்தன. ஜமாஅத், தம் வழிவகைகளைக் கொண்டு, உலகம் முழுவதிலும் உள்ள தேவையுடைய மக்களுக்கு அவர்கள் எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி! அல்லது எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி! சேவை செய்து வருவதைக் கண்டு மகிழ்ச்சியாக இருந்தது.'

பிறகு, கூறுகிறார்:

'அனைத்து மக்களும் நன்கு படித்தவர்களாக இருந்தார்கள்; உயர்கல்வி கற்றவர்களாகவும், மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், இதர வல்லுநர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் மிகப் பணிவுடன் தன்னார்வத் தொண்டாற்றிக் கொண்டிருந்தது என்னை மிகவும் கவர்ந்தது.'

பிரேசிலைச் சேர்ந்த தொலைக்காட்சி செய்தியாளரான அரிக் போர்டிலர் சாஹிப் கூறுகிறார்:

'இந்த நிகழ்வின் பரந்த அளவையும், பிரம்மாண்டத்தையும் கண்டு நான் வியப்படைந்தேன் என்பதை கூறாமல் இருக்க முடியாது. குறிப்பாக லங்கர்கானாவின் அளவும், உணவு தயாரிக்கும் இடங்களும் நவீனமாகவும், பரந்ததாகவும், ஒழுங்கமைக்கப்பட்டதாகவும், மிகவும் தூய்மையாகவும் இருந்தன. ஒவ்வொரு தன்னார்வலரின் உழைப்பு, சுத்தம் மற்றும் அர்ப்பணிப்பைக் காண்பது ஓர் அழகான அனுபவமாக இருந்தது; அது என் இதயத்தை அமைதியாலும் மகிழ்ச்சியாலும் நிரப்பியது.'

பிலிப்பைன்ஸிலிருந்து பேராசிரியர் யூசுஃப் மொரேலிஸ் சாஹிப் தம் மனைவியுடன் வந்திருந்தார்; அவரும் ஒரு பேராசிரியை ஆவார். அவரது பெயர், ஷரீமா மொரேலிஸ் சாஹிபா. இவர்கள் கிறிஸ்தவத்திலிருந்து இஸ்லாத்தைத் தழுவியவர்கள்; நேஷனல் கமிஷன் ஆஃப் முஸ்லிம் ஃபிலிப்பினோஸ் அமைப்பின் தலைவராகவும் இருந்துள்ளார். இவர் அஹ்மதி கிடையாது. இவர் கூறுகிறார்:

'அதிகாரப்பூர்வ வருகைப் பதிவு சுமார் ஐம்பதாயிரம் என்று கூறப்பட்டபோதிலும், மாநாட்டுத் திடலின் பரப்பளவையும், ஏற்பாடுகளின் அளவையும் பார்த்தபோது இக்கூட்டம் அதை விட மிகவும் பெரியது என்று எனக்குத் தோன்றியது. குறிப்பாக, தங்கள் நேரத்தையும், சேவையையும் வழங்கி, பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தங்குமிடம், உணவு, போக்குவரத்து, தூய்மை மற்றும் பிற வசதிகள் கிடைக்கப்பெறும் ஒரு முழுமையான தற்காலிக நகரத்தையே உருவாக்கும் ஆயிரக்கணக்கான தன்னார்வலர்களின் முயற்சிகள் வியப்பளிப்பதாக இருந்தன. பொருளாதார ரீதியாக வசதியாக இருந்தபோதிலும் தன்னார்வலர்கள் தொண்டாற்றுகிறார்கள்; மிகவும் எளிமையாகவும், உடலுழைப்பு தேவைப்படும் சேவையை மிகப் பணிவுடனும் செய்கிறார்கள்; இந்த விஷயங்களே அமைதியான, நல்லிணக்கம் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்க முடியும். சிறிய குழந்தைகள் தண்ணீர் கொடுப்பதைக் கண்டேன். உணவுப் பிரிவில் பதினான்கு, பதினைந்து வயதான இரு சிறுவர்கள் பணியில் இருந்தனர்; அவர்கள் அவ்வளவு பொறுப்புடன் விரைந்தோடி முந்நூறு பேருக்கு உணவளித்துக் கொண்டிருந்த விதம் வியப்பை ஏற்படுத்தியது. இங்கு வந்த பிறகே சர் முஹம்மத் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் ஓர் அஹ்மதி என்பதை நான் அறிந்து கொண்டேன். இவ்வாறே டாக்டர் அப்துஸ் ஸலாம் சாஹிபின் சாதனைகளைப் பற்றியும் கூடுதலாக அறிந்து கொண்டேன். இவ்வாறே ஜமாஅத் இமாமின் சொற்பொழிவுகள் என்னை மிகவும் கவர்ந்தன. குறுகிய நேரத்தில் பல தலைப்புகளை அவர்கள் உள்ளடக்கியிருந்தார்கள்; ஒவ்வொரு தலைப்பையும் விரிவாகவும், அதேசமயம் எளிமையாகவும், புரிந்து கொள்ளக்கூடிய வகையிலும் எடுத்துரைத்தார்கள்.'

எல்சால்வடோரிலிருந்து (El Salvador) ஒரு விருந்தினரான சாவுல் லிகாடோ சாஹிப் வந்திருந்தார்; இவர் மத்திய அமெரிக்க நாடாளுமன்றத்தில் எல்சால்வடோரின் பிரதிநிதியாக உள்ளார். அவர் கூறுகிறார்:

' அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை மிக நெருக்கமாகப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்த எனது முதல் யூ.கே. ஆண்டு மாநாடு இதுவாகும். நாம் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும்? என்பதே நான் கற்றுக்கொண்ட மிக முக்கியமான விஷயமாகும். இதன் மையக் கருத்து என்னவென்றால், மரத்திலிருந்து பிரிந்த ஒரு கிளை எவ்வாறு காய்ந்துபோகிறதோ – ஏனெனில் மரமே அதற்கு வாழ்வளித்துக் கொண்டிருந்தது – அதேபோல் நாமும் இறைவனை விட்டுத் தூரமானால் அது நமது ஆன்மிக மரணமாகும். 'நாம் ஏதேனும் சிரமத்தில் இருக்கும்போது மட்டுமே இறைவனைத் தேடுகிறோம்' என்று இமாம் ஜமாஅத் கலீஃபா அவர்கள் கூறியது முற்றிலும் உண்மை.

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
(13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

இவ்வாறே கணவன் மனைவி உறவு குறித்து அவர்கள் வழங்கிய அறிவுரைகளின்படி நாம் செயல்பட்டு, குறைகளை கண்டும் காணாமல் கடந்து சென்றால் திருமண வாழ்க்கையின் பல பிரச்சனைகளிலிருந்து தப்ப முடியும்.'

ஆகவே, அஹ்மதியல்லாதவர்களே இச்செய்தியைப் புரிந்துகொள்ள முடியும் என்றால், அஹ்மதிகள் இச்செய்தியை எவ்வளவு அதிகமாகப் புரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது (என்று பாருங்கள்)!

பிறகு அவர் கூறுகிறார்:

'அசாதாரணமான ஏற்பாடுகள் என்னை மிகவும் கவர்ந்தன. ஜமாஅத் இமாமைச் சந்திப்பதற்கு மிகக் குறைந்த நேரமே கிடைத்தது; இன்னும் அதிக நேரம் கிடைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன்; ஆனால் அந்தச் சிறிய நேரத்திலும் அவர்கள் ஒவ்வொன்றையும் கவனித்து என்னிடம் உரையாடினார்கள். சந்திப்பிற்குப் பிறகு கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்குத் தம் ஜமாஅத்தைப் பற்றியும், அது எங்கு எந்த நிலையில் நிற்கிறது என்பது பற்றியும் ஆழமான தகவல்களும் அக்கறையும் உள்ளது என்பதில் எனக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

பெலீஸிலிருந்து (Belize) புதிதாக அஹ்மதிய்யத்தை ஏற்ற மூஸி கொரியானோ சாஹிபா கூறுகிறார்:

'நாங்கள் மிகவும் சிறிய ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள். எங்கள் நகரத்தின் மக்கள் தொகை வெறும் ஐம்பதாயிரம் மட்டுமே. நூறு பேர் கூடினாலே சண்டைகள் தொடங்கி விடுகின்றன; ஆனால், மாநாட்டின் ஏற்பாட்டில் அசாதாரணமான அமைதி நிலவியது. மக்கள் மிகவும் நல்லமுறையில் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டனர்.'

அவர் கூறுகிறார்:

என் உணர்வுகளை வார்த்தைகளால் விவரிப்பது எனக்குச் சாத்தியமில்லை. என்னை ஓர் அஹ்மதி முஸ்லிம் என்று கூறிக்கொள்வதில் இப்போது நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.'

அவர் கூறுகிறார்:

'கடந்த ஆண்டு மாநாட்டில் பங்கேற்கும் வாய்ப்பு என் கணவருக்குக் கிடைத்தபோது, 'உங்கள் மனைவிக்கும் அஹ்மதிய்யத்தின் தூதை எட்டவையுங்கள் என்று கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறியிருந்தார்கள்; அல்லாஹ்வின் அருளால் இன்று நான் முழு நம்பிக்கையுடனும், பெருமையுடனும் நான் ஓர் அஹ்மதி முஸ்லிம் என்று கூறுகிறேன்!'

பல்கேரியாவிலிருந்து தொழிலாளர் மற்றும் சமூகக் கொள்கை அமைச்சகத்தின் தலைமைச் செயலாளராக இருக்கும் சோலன் பென்கோஃப் சாஹிப் கூறுகிறார்:

'ஜெர்மனியின் பல்வேறு நகரங்களில் நடைபெற்ற ஆண்டு மாநாடுகளில் நான் பலமுறை பங்கேற்றுள்ளேன்; ஆனால் பிரிட்டன் ஆண்டு மாநாட்டின் அனுபவம் அதன் பிரம்மாண்டம், நிர்வாகம் மற்றும் உயர் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் தனித்துவமானதாகவும், இணையற்றதாகவும் இருந்தது. என்னை மிகவும் கவர்ந்த விஷயம் மாநாட்டுத் திடலின் அசாதாரணமான பரப்பளவும், அங்கு உருவாக்கப்பட்டிருந்த தற்காலிக நகரமுமாகும். அனைத்து அடிப்படை வசதிகளும் மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன; ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் அங்கு கூடியிருந்தனர். மாநாட்டில் இடம்பெற்ற சொற்பொழிவுகள் மிகவும் தகவல்கள் நிறைந்ததாகவும், அறிவுசார்ந்தவையாகவும், உயர்தரம் கொண்டதாகவும் இருந்தன. பேச்சாளர்கள் மார்க்க மற்றும் அறிவியல் தலைப்புகளை மிகவும் அழகிய முறையில் முன்வைத்தனர்; இது வருகை தந்திருந்தவர்களின் அறிவையும், ஞானத்தையும் அதிகரித்தது. பல்வேறு கண்காட்சிகள் என்னை மிகவும் கவர்ந்தன; அவை நவீன எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப மிகவும் தொழில்முறை பாணியில் வரிசைமைக்கப்பட்டிருந்தன. குழந்தைகளுக்குமான தர்பிய்யத் திட்டங்களும், கண்காட்சிகளும் அங்கு இருந்தன. இவை, அடுத்த தலைமுறையின் தர்பிய்யத்திற்கு உகந்த நல்ல விஷயங்கள் ஆகும்.'

செனிகாலிலிருந்து அஹ்மதூ பா சாஹிப் வந்திருந்தார்; இவர் தீஜானிய்யா பிரிவைச் சேர்ந்த தம் பகுதியின் மார்க்கத் தலைவராவார். அவர் கூறுகிறார்:

இந்த மாநாட்டின் பிரம்மாண்டமான நிர்வாகமும் ஏற்பாடுகளும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. இந்த மாநாடு நடத்தப்பட்ட விதம், பாதுகாப்பிற்கான சிறந்த ஏற்பாடுகள், வருகை தந்தவர்களின் உயரிய நற்பண்புகள், அவர்களின் அறிவுக்கூர்மை, நல்லொழுக்கம், குறிப்பாக அஹ்மதிய்யா ஜமாஅத் உறுப்பினர்களின் உயரிய நன்னடத்தை ஆகியவை என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.'

அவர் கூறுகிறார்:

முன்பு அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி வெறுமனே கேள்விப்பட்டிருந்தேன்; ஆனால் இன்று மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட, மிகவும் கலப்பற்ற, தம் கலீஃபாவின் வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றி நடக்கக்கூடிய ஒரு ஜமாஅத்தை என் கண்களால் கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தேன்.'

அவர் கூறுகிறார்:

'கொடை வழங்குவது, குடிநீர்க் கிணறுகள் அமைப்பது, பள்ளிவாசல்கள், மருத்துவமனைகள், நிவாரணப் பணிகள் மற்றும் பிற நலத்திட்டங்கள் போன்ற மனிதகுலத் தொண்டுக்காக நீங்கள் நிறையச் செய்து வருகிறீர்கள் என்பது எனக்கு முன்பே தெரியும்; ஆனால் இன்று உங்களின் மனித மதிப்புகள், மனித வளர்ச்சிக்கான முயற்சிகள், அறிவு, அடிப்படை கல்வியை ஊக்குவித்தல் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை கண்காட்சிகளில் பார்த்த பிறகு நான் இன்னும் அதிகமாக ஈர்க்கப்பட்டேன். உண்மையிலேயே, உள்ளத்தின் ஆழத்திலிருந்து நான் உங்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜமாஅத் இமாமுடன் எனக்கு ஒரு சந்திப்பு நடைபெற்றது; அதன் மூலமும் ஜமாஅத்தைப் புரிந்துகொள்வதற்கு எனக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது.

இவ்வாறே செனிகாலிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினரான மூர்மான் காபா ஜாகாட்டே சாஹிப் கூறுகிறார்:

'மக்களுக்குச் சேவை செய்தல், சுயமரியாதை, தைரியம் மற்றும் மன உறுதி ஆகியவையே உங்களின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்கள் என்பதை நான் நேரடியாகக் கண்டேன். வார்த்தைகளுக்கும் மேலாகச் சேவை மனப்பான்மை கொண்ட இஸ்லாத்தை நான் இங்கு கண்டேன். அள்ளிக் கொடுக்கும் கரங்களை கண்டேன்; மன்னிக்கும் இதயங்களைக் கண்டேன்; மற்றவர்களுக்காக எப்போதும் திறந்திருக்கும் கதவுகளைக் கண்டேன்.'

கொசோவோவிலிருந்து பேராசிரியர் டாக்டர் கலீல் இப்ராஹிமி சாஹிப் வந்திருந்தார்; இவர் ஒரு புகழ்பெற்ற கல்வியாளர், ஆராய்ச்சியாளர் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியராவார். தம்முடைய கல்விச் சேவைகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் காரணமாகக் கொசோவோவில் மிகவும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் பார்க்கப்படுபவர். அவர் கூறுகிறார்:

'ஒவ்வொரு துறையிலும் காணப்பட்ட ஒழுக்கம், ஒத்துழைப்பு மற்றும் தியாகத்தின் செயல்முறைக் காட்சி உண்மையிலேயே பொறாமைப்படத்தக்கதாக இருந்தது. அத்துடன், ஒவ்வோர் தனிநபரிடமிருந்தும் கிடைத்த அன்பு, மனத்தூய்மை, மரியாதை மற்றும் தாராளமான விருந்தோம்பல் ஆகியவை இந்த அனுபவத்தை என்னால் மறக்க முடியாத ஒன்றாக ஆக்கிவிட்டன.'

அவர் கூறுகிறார்:

'இந்நாட்களில் பல்வேறு சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது; குறிப்பாக ஜமாஅத் இமாமின் உரையைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களுடன் சந்திப்பும் நடைபெற்றது. என்னை மிகவும் கவர்ந்த விஷயம் என்னவென்றால் அமைதி, மத நல்லிணக்கம், மனித சமத்துவம், பரஸ்பர மரியாதை மற்றும் சமூகத்தின் ஒவ்வோர் தனிநபரையும் அரவணைத்துச் செல்லும் கோட்பாடு ஆகியவற்றின் மீது மீண்டும் மீண்டும் அசாதாரணமாக அழுத்தம் கொடுக்கப்பட்டதே ஆகும். உலகெங்கிலும் பல பகுதிகளில் மார்க்க ரீதியான தவறான புரிதல்களும், தீவிரவாதமும், சகிப்பின்மையும் ஒரு தீவிரமான சவாலாக மாறியுள்ள இன்றைய காலகட்டத்தில், இந்தச் செய்திகள் மிகவும் சரியான நேரத்தில் அமைந்த, நம்பிக்கையளிக்கும், மனிதகுலத்திற்கு வழிகாட்டக் கூடிய ஒன்றாக உணர்கிறேன்.'

ஸ்பெயினிலிருந்து பெத்ரோ அபாத் (Pedro Abad) நகர மேயரான ஜுவான் அந்தோனியோ ரெஜஸ் (Juan Antonio Reges) சாஹிப் கூறுகிறார்:

ஆண்டு மாநாடு நமக்கு எதைக் காண்பதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது என்றால், இந்த ஒன்றுகூடல் வெறும் நம்பிக்கையின் கொண்டாட்டம் மட்டுமல்ல; மாறாக, பல்வேறு நாடுகள், கலாச்சாரங்கள் மற்றும் யதார்த்தங்களைக் கொண்ட மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதின் ஓர் அசாதாரண எடுத்துக்காட்டாக விளங்கியதை காட்டியது. இது அமைதி, பரஸ்பர மரியாதை மற்றும் சகோதரத்துவம் போன்ற பொதுவான உயரிய மதிப்புகளின் அடிப்படையில் அனைவரையும் ஒன்றிணைக்கிறது. பல்வேறு கண்காட்சிகள் மற்றும் தகவல் சார்ந்த நிகழ்ச்சிகளின் மூலம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பல்வேறு துறைகளில் செய்து வரும் சேவைகளைப் பற்றியும் நான் அறிந்துகொண்டேன்.'

ஆஸ்திரேலியாவிலிருந்து இரு பெண் வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். கேரோலின்ஸ் சாஹிபாவும், ஹானா சாஹிபாவும். அவர்கள் கூறுகிறார்கள்:

'ஆண்டு மாநாட்டில் பங்கேற்றதை எங்கள் நற்பேறாகக் கருதுகிறோம். ஏற்பாடுகளைப் பார்த்து வியப்படைந்தோம். எங்கும் அமைதியான சூழல் நிலவியது. நான் மாநாட்டுத் திடலிலும், வெளியிலும் சுற்றிப்பார்த்தேன்; எங்கும் சண்டையோ சப்தமோ இருக்கவில்லை. இவ்வளவு அமைதியான, சாந்தமான மனிதர்களை உலகில் பார்க்க முடியாது. ஒவ்வொருவரும் மற்றவருக்கு உதவத் தயாராக இருந்தார். குழந்தைகள் தண்ணீர் கொடுப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன்; அத்துடன் மனித உரிமைகள் குறித்த கூட்டத்திலும் கலந்துகொண்டேன். உலகம் முழுவதும் அமைதியைப் பரப்புவது, உரிமைகளை நிலைநாட்டுவது குறித்து ஜமாஅத் கொண்டிருக்கும் சிந்தனை, அஹ்மதிகளுக்காக மட்டுமின்றி ஒவ்வோர் ஒடுக்கப்பட்ட நபருக்காகவும் குரல் கொடுப்பது பெரிய விஷயமாகும்; இது என்னை மிகவும் கவர்ந்தது.'

அவர்கள் எந்த அளவிற்கு ஈர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால், அடுத்த ஆண்டும் எங்களை இங்கு அழைத்து வர வேண்டும் என்று தம் முபல்லிக்கிடம் வாக்குறுதி வாங்கிச் சென்றுள்ளனர்.

பொலிவியாவிலிருந்து (Bolivia) பத்திரிகையாளரான கைடர் கின் சாஹிப் மாநாட்டிற்கு வந்திருந்தார். அவர் கூறுகிறார்:

'அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டில் பங்கேற்றது எனக்கு ஒரு மகத்தான அனுபவமாகும். இவ்வாறே, சொற்பொழிவுகள் என்னை மிகவும் கவர்ந்தன; ஜமாஅத் இமாமின் சொற்பொழிவு என்னை ஈர்த்தது. இது எங்கள் வாழ்க்கையில் என்றென்றும் பதிந்துபோகக்கூடிய, எங்கள் இறைவனுக்கு நெருக்கமாகி அவனது அருளைப் பெறுவதற்கான வழியைக் காட்டக்கூடிய ஒரு மாநாடாகும்.'

இவர்கள் இஸ்லாத்தின் தூதுச்செய்தியையும் ஏற்றுக்கொள்பவர்களாக ஆவதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக!

அவர் கூறுகிறார்:

முஸ்லிம் பெண் ஒடுக்கப்பட்டவள்; அழுத்தத்திற்கு உள்ளாக்கப்படுபவள் என்று பல ஆண்டுகளாகப் பரப்பப்பட்டு வரும் பொய்ப் பிரச்சாரம் முற்றிலும் பொய்யானது என்பதை நேரில் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதற்கு மாறாக, இஸ்லாத்தில் பெண்களுக்கு வழங்கப்படும் மரியாதை, பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் ஆகியவை என்னை மிகவும் கவர்ந்தன.'

கொசோவோவிலிருந்து யலிஸ் ஹேன் நகராட்சியின் (Elez Han) கேபினட் தலைவரான ஒனி ஜோஷரி சாஹிப் கூறுகிறார்:

'ஜமாஅத் இமாமின் சொற்பொழிவைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மாநாடு தொடங்குவதற்கு முன்பு வியாழக்கிழமை இரவன்று, விருந்தினர்களுக்குச் சேவை செய்வதை ஒரு மகத்தான பொறுப்பாகக் கருதி அன்பு, பணிவு, மனத்தூய்மை மற்றும் மிகச்சிறந்த நல்லொழுக்கத்துடன் நிறைவேற்றுமாறு தன்னார்வலர்களுக்கு அவர்கள் அறிவுறுத்தினார்கள். அந்நேரத்தில் இந்த அறிவுரை எனக்கு நன்றாக இருந்தது. ஆனால் அடுத்த நாளே இதன் நடைமுறை முன்மாதிரியை என் கண்களால் பார்ப்பேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை. திடீரென என் உடல்நிலை சரியில்லாமல் போனது; தலைச்சுற்றல் ஏற்பட்டது; வாந்தி வரத் தொடங்கியது. உடனே முதலுதவிப் பிரிவினர் என்னைக் கவனித்தனர்; ஆறு மருத்துவர்கள் என்னைச் சுற்றி ஒன்று கூடிவிட்டனர். நான் என் வீட்டில் இருப்பது போல் உணர்ந்தேன். அந்தத் தருணத்தில்தான் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டல்கள் வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல, அவை ஒவ்வொரு தன்னார்வலரின் நடைமுறை வாழ்வின் ஓர் அங்கமாகும் என்பதை நான் உணர்ந்தேன்.'

ஜப்பானிலிருந்து ஹிரோயுகி இவாமோத்தோ சாஹிப் கூறுகிறார்:

'இது எங்களுக்கு மிகவும் மறக்க முடியாத பயணமாக இருந்தது. மாநாட்டின் சூழலை அன்பு மற்றும் ஆன்மிகம் நிறைந்ததாக நாங்கள் உணர்ந்தோம். தொண்டாற்றும் பணியாளர்களின் உணர்வு, தண்ணீர் கொடுக்கும் சிறுவர்களின் சேவை முறை, கிலாஃபத்துடன் ஜமாஅத் கொண்டிருக்கும் தொடர்பு மற்றும் உங்களைப் பார்ப்பதற்கான ஏக்கம் ஆகியவை மிக அற்புதம் வாய்ந்த அனுபவமாகும்.'

மற்றொரு நண்பர் லெபனானைச் சேர்ந்தவர், பெல்ஜியத்தில் வசிப்பவர். அவர் கூறுகிறார்:

'நான் தூதரகத் துறையில் பணியாற்றுவதால் கத்தார், பிரஸ்ஸல்ஸ் (Brussels) மற்றும் பிற பெரிய இடங்களில் பெரிய அளவிலான கூட்டங்கள் நடைபெறும் உலகின் பல்வேறு இடங்களுக்குச் சென்றுள்ளேன். ஆனால், ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் இருந்தபோதிலும், யாரும் யாரையும் தள்ளாத, யாரும் யாரையும் திட்டாத, இந்த மாநாட்டைப் போன்ற உயரிய, ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியை நான் எங்கும் பார்த்ததில்லை. ஒவ்வொருவரும் மரியாதை, கண்ணியம் மற்றும் அன்புடன் சந்திக்கிறார்; இஸ்லாத்தின் சகோதரத்துவப் போதனையை நான் இங்கு நடைமுறையில் கண்டேன். இவ்வாறே, லா இக்ராஹ ஃபித்தீன் (மார்க்கத்தில் எவ்வித கட்டாயமுமில்லை) எனும் திருக்குர்ஆனின் போதனையை நான் இங்கு மாநாட்டில் நடைமுறையில் கண்டேன்; ஏனெனில், பிற மதங்களைச் சேர்ந்த மக்களும் இங்கு வருகிறார்கள், இங்கு தங்குகிறார்கள், அவர்களும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுகிறார்கள்; மகிழ்ச்சியுடன் சுதந்திரமாகச் சுற்றிவருகிறார்கள்.'

அர்ஜென்டினாவிலிருந்து செர்ஜியோபன் சாஹிபும் இதில் பங்கேற்றார். அவர், நாட்டின் மிக முக்கிய தேசிய செய்தித்தாளான 'கிளாரின்' (Clarin) உடைய மத விவகார பிரிவின் முதன்மை ஆசிரியராவார். அவர் கூறுகிறார்:

' வருவதற்கு முன்பு, இந்த மாநாட்டில் பங்கேற்பது குறித்து எனது நாளிதழ் அலுவலகத்தில் தெரிவித்தபோது, எனது சக ஊழியர்கள் பலர் இஸ்லாத்திற்கு எதிரான பொதுவான மார்க்க துவேஷத்தின் காரணமாக, எனது முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு எனக்கு அறிவுறுத்தினர்.

எவ்வாறாயினும், மாநாட்டின் சூழலை நேரடியாகப் பார்த்தபோது, இஸ்லாம் ஓர் அமைதியான மார்க்கம் என்பதற்கு உங்களின் ஜமாஅத்தே சிறந்த சான்றாகவும், உங்களின் மாநாட்டின் இந்த அமைதியான சூழலுமே சான்றாகவும் இருப்பதை அறிந்துகொண்டேன். இவ்வளவு பெரிய பரந்த கூட்டம் இருந்தபோதிலும் எங்கும் அமைதியும் பாதுகாப்பும் நிலவியது.'

மாநாட்டின் இறுதி நாளன்று இவர் பார்வையாளர்களுக்கும் இந்தச் சூழலைக் காட்டுவதற்காகவும், இஸ்லாம் அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பும் ஒரு மார்க்கம் என்பதை வலியுறுத்துவதற்காகவும், 'டி.என்' (TN) தொலைக்காட்சி அலைவரிசையில் மாநாட்டின் நேரலையை ஒளிபரப்பினார்; மேலும் ஜமாஅத்தை அதற்குச் சான்றாக முன்வைத்தார். இவர் ஒரு கத்தோலிக்கராவார்.

கூறுகிறார்:

' மாநாட்டின் தொடக்க உரையில் உங்களது கலீஃபா இறையச்சம் குறித்துப் பேசியது எனக்குப் பிடித்திருந்தது; அதுவே ஒவ்வொரு மார்க்கத்தின் அடிப்படையாகும். ஒரு கிறிஸ்தவனாக, இந்த வகையில் எனது அறிவையும் ஞானத்தையும் பெரிதும் பெருக்கிக் கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்தது.'

லித்துவேனியாவிலிருந்து (Lithuania) சுவெத்லானா மார்க்கெவிச்சீனே சாஹிபா கூறுகிறார்:

' ஆண்டு மாநாட்டின்போது முஸ்லிம்களுடன் இருந்து அவர்களின் வழிமுறைகளை நெருக்கமாகப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது; பல விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். பெண்களுக்கான ஜமாஅத் இமாமின் சொற்பொழிவைக் கேட்ட பிறகு, இஸ்லாத்தில் பெண்ணின் நிலை குறித்தான எனது பல தவறான புரிதல்கள் நீங்கின. இஸ்லாம் பெண்ணிற்கு மரியாதை, பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்து போதிக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். உரையானது மிகவும் சமநிலையானதாகவும், ஆதாரப்பூர்வமானதாகவும், உள்ளத்தைத் தொடுவதாகவும் இருந்தது; இது இஸ்லாத்தைப் பற்றி மேலும் நேர்மறையான கோணத்தில் சிந்திக்க எனக்கு வாய்ப்பளித்தது.'

சுவிட்சர்லாந்திலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆலோசகரான ஜூலியா பார்தீசி சாஹிபா கூறுகிறார்:

'இது எனக்கு ஒரு தனித்துவமான அனுபவமாக இருந்தது; இக்கூட்டத்தில் பங்கேற்றதன் மூலம், எனக்கு இதற்கு முன்பு அரைகுறையாக மட்டுமே தெரிந்த ஒரு மதச் சமூகத்தை அருகில் இருந்து பார்க்கவும் புரிந்து கொள்ளவும் வாய்ப்பு கிடைத்தது. தன்னார்வலர்கள் மற்றும் பங்கேற்பாளர்களின் விருந்தோம்பல், நல்லொழுக்கம் மற்றும் ஒத்துழைப்பு என்னை மிகவும் கவர்ந்தன. ஒவ்வொருவரும் மிகவும் இன்முகத்துடன் சந்தித்தனர்; எனது கேள்விகளுக்குப் பதிலளித்தனர்; கேள்விகளுக்குப் பதிலளிக்க எப்போதும் தயார் நிலையில் இருந்தனர்; இதன் காரணமாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாறு, பாரம்பரியங்கள் மற்றும் அடிப்படை மதிப்புகளைச் சிறந்த முறையில் புரிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.'

பல்வேறு கண்காட்சிகளையும் அவர் பாராட்டியுள்ளார்.

அவர் கூறுகிறார்: 'வரலாறு, மனிதகுல சேவைத் திட்டங்கள் மற்றும் ஒவ்வொரு துறையிலும் செய்யப்படும் சேவைகளை மிகச் சிறப்பான முறையில் வெளிப்படுத்திய பல சுவாரஸ்யமான கண்காட்சிகள் அங்கு இருந்தன. பெண்களின் பங்களிப்பு தொடர்பான கண்காட்சி எனக்குக் குறிப்பாகத் தகவல் நிறைந்ததாக அமைந்தது; ஏனெனில் ஜமாஅத்தின் பார்வையில் இந்த தலைப்பை புரிந்து கொள்வதற்கான வாய்ப்பை அது வழங்கியது.'

இத்தாலியின் துரினிலிருந்து (Turin) பேராசிரியை ஃபெடெரிகா சோனா சாஹிபா கூறுகிறார்:

'ஆண்டு மாநாட்டில் தொலைநோக்குப் பார்வையும் ஆன்மிகமும் இணைந்த ஓர் அழகிய கலவையைக் காண முடிந்தது. அறிவுப்பூர்வமான கோணத்தில் பார்த்தால், அனைத்து ஏற்பாடுகளும் எவ்வளவு சுமுகமாக இயங்கின என்பது ஆச்சரியமாக இருந்தது; ஏதோ காற்று தன்னோடு அடித்துச் செல்வது போல் இயங்கியது. தண்ணீர் கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சிறிய தன்னார்வலர் முதல் வயதான ஊழியர்கள் வரை அனைவரிடமும் நல்லெண்ணம், விருந்தோம்பல், நல்லொழுக்கம் மற்றும் புன்னகை ஆகியவை பொதுவான அம்சமாக இருந்தன. உணர்ச்சிபூர்வமாகச் சொன்னால், ஒரு பெரிய சர்வதேசக் குடும்பத்தில் வரவேற்கப்படுவது போன்று அமைந்திருந்தது. விருந்தினர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்; கவனத்துடனும் அன்புடனும் நடத்தப்படுகிறார்.'

அவர் கூறுகிறார்:

'புன்னகையைப் பகிர்ந்துகொண்ட, வழியைக் கண்டறிய உதவிய அல்லது தங்களின் வேதனையான, மகிழ்ச்சியான, தெளிவூட்டும் வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்து கொண்ட பல ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை நான் சந்தித்தேன்.'

குறிப்பாக, அவர் ஆன்மிக மற்றும் நுட்பமான அம்சங்களைக் குறிப்பிட்டுப் பேசுகையில், தெளிவான கனவுகளில் முன்னறிவிப்புகள் கிடைத்தது போன்ற சம்பவங்களைச் சிலர் தம்மிடம் பகிர்ந்துகொண்டது தம்மைப் பெரிதும் கவர்ந்ததாகக் கூறுகிறார். இந்த ஜமாஅத் புவியியல் எல்லைகளைக் கடந்து நிற்கும் ஒரு மகத்தான, ஒருங்கிணைந்த குடும்பமாகும் என்றும் அவர் கூறுகிறார்.

ரோமில் உள்ள மத சமூகவியல் ஆய்வாளரான அய்தன் அவர்கள் கூறுகிறார்:

'முதலில் கண்ணில் படும் விஷயம் என்னவென்றால், இவ்வளவு அதிகமான சமுதாயங்கள், மொழிகள் மற்றும் கலாச்சாரங்கள் ஒரே இடத்தில் கூடியிருப்பதுதான். பல்வேறு நாடுகளின் கொடிகளை ஜமாஅத்தின் கொடியுடன் ஏற்றி வைக்கும் நிகழ்ச்சி உலகளாவிய ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது; அதாவது, பல்வேறு சமுதாயங்கள் தங்களின் தனித்துவத்தை இழக்காமல் ஒன்றாக வாழும் ஒரு சிறிய உலகத்தைப் போல் இது உள்ளது.'

அவர் கூறுகிறார்: மதச் சமூகவியலின் ஒரு மாணவன் என்ற முறையில், ஒரு மார்க்கச் சமூகம் எவ்வாறு உள்ளூர் அடையாளத்தையும் உலகளாவிய ஒற்றுமையையும் ஒன்றாகக் கொண்டு செல்ல முடியும் என்பதைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இவ்வாறே, விருந்தோம்பலையும் பணியாளர்களின் சேவையையும் அவர் பெரிதும் பாராட்டியுள்ளார்.

கனடாவின் ஸ்டோனி நாகோடா ஃபர்ஸ்ட் நேஷன் (Stoney Nakoda First Nation) பகுதியைச் சேர்ந்த ரெவண்டோனி ஸ்னோ சாஹிப் கூறுகிறார்:

'இவ்வளவு பரந்த கூட்டத்தைப் பார்ப்பது எனக்கு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. இங்கு மிகச் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன; ஒவ்வொரு நபரும் பணிகளை நடத்துவதற்காகத் தம்மால் இயன்ற வரை முழு முயற்சி செய்து கொண்டிருந்தனர்.'

மேலும், அவர் கூறுகிறார்:

'இந்தப் பணி எளிதானது அல்ல; ஆனால் இது எந்த உணர்வோடு செய்யப்பட்டு வந்ததோ, அது என்னை மிகவும் கவர்ந்துள்ளது.'

துருக்கியிலிருந்து வந்திருந்த ஜமாஅத்தைச் சாராத விருந்தினரான திக்லே பல்கலைக்கழகத்தின் (Dicle University) பேராசிரியரும், இஸ்லாமிய மார்க்க வரலாற்றுத் துறையின் தலைவருமான பேராசிரியர் மதீன் போசான் சாஹிப் தம் வழிகாட்டலின் கீழ் ஜமாஅத்தைப் பற்றி மாணவர்களைக் கொண்டு ஆய்வேடுகளையும் எழுத வைத்துள்ளார். அவர் கூறுகிறார்:

'மாநாட்டின் ஒவ்வோர் ஏற்பாட்டிலும் ஒவ்வொரு பணியிலும் முழுமையான ஒழுக்கம் தென்பட்டது.'

மேலும் அவர் கூறுகிறார்:

'அல்லாஹ், அவனது தூதர் மற்றும் மறுமை நாள் போன்ற ஈமானின் நிபந்தனைகளையும் இஸ்லாத்தின் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளும் எவரையும் நாங்கள் முஸ்லிமாகக் கருதுகிறோம்; அவரைக் காஃபிர் என்று கூறுவது அனுமதிக்கப்பட்டது அல்ல என்பதே எங்களின் அடிப்படைக் கண்ணோட்டம் ஆகும். எனவே, எங்களின் பார்வையில் அஹ்மதிகளும் முஸ்லிம்களே ஆவர்.

பாகிஸ்தானிய ஆலிம்களுக்கும் இது புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

பிறகு, கூறுகிறார்: உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான ஜமாஅத்தின் முயற்சிகளை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

இவ்வாறே, அவர் ஒவ்வோர் இடத்திலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியான ஏற்பாடுகளைப் பார்த்தார்; ஜமாஅத்தில் இஸ்லாமிய பர்தாவுக்கான போதனைக்குச் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது என்ற முடிவிற்கும் வந்தார்.

ஃபிரான்ஸிலிருந்து 'ஃப்ரீடம் ஆஃப் கான்ஷியன்ஸ்' (Freedom of Conscience) ஒருங்கிணைப்பு அமைப்பின் தலைவரான தேரி வால்லே (Thierry Valle) சாஹிப் கூறுகிறார்:

'குறையற்ற ஏற்பாடுகள், அமைதியான சூழல், மிகுந்த சாந்தம் நிலவியது. ஜமாஅத் இமாமின் நிறைவுரை உண்மையிலேயே ஒரு மகத்தான வழிகாட்டியாகவும், உள்ளத்தை ஈர்க்கக்கூடியதாகவும் இருந்தது. நமக்காக நாம் அமைத்துக் கொள்ள வேண்டிய உயரிய தரங்களை அது நமக்கு நினைவூட்டியதுடன், நாம் அனைவரும் இணைந்து உருவாக்க முயல வேண்டிய அந்த அமைதியான உலகத்தைப் பற்றிய உணர்வையும் அளித்தது.'

பிறகு கூறுகிறார்:

'நான் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு வந்த பிறகுதான், அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் பரப்பி வரும் அமைதி, அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் செய்திக்கு நடைமுறைச் சான்றாக நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒரு பூங்கொத்தைப் போல் ஒன்று கூடி நிற்பதை என் கண்களால் கண்டேன்; அந்த நறுமணத்தை நானே உணர்ந்தேன்.'

பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒரு செய்தியாளர் கூறுகிறார்:

'நான் முன்பும் பங்கேற்றுள்ளேன்; ஆனால் இந்த ஆண்டு இமாம் ஜமாஅத் அவர்களின் பெண்களுக்கான உரை என்னை மிகவும் கவர்ந்தது; அதில் பெண்கள் மார்க்க அறிவை மட்டுமின்றி உலகக் கல்வியையும் கற்று, உலகின் ஒவ்வொரு துறையிலும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று அவர்களை ஊக்குவித்தார்கள்.'

இவ்வாறே ஜப்பானைச் சேர்ந்த பேராசிரியை மினேசாக்கி ஹிரோகோ (Minesaki Hiroko) சாஹிபா என்பவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி ஓர் ஆராய்ச்சிப் புத்தகத்தையும் எழுதியுள்ளார்; இதற்காக அவர் ரப்வா, காதியான் மற்றும் பல்வேறு இடங்களுக்கும் சென்றுள்ளார்; இவருக்குப் பரந்த ஆழமான அறிவு உள்ளது. அவர் கூறுகிறார்:

'மாநாட்டில் எனக்கு ஒரு ஜெர்மன் இளைஞர் அறிமுகமானார். அவர் அன்றைய தினம்தான் பைஅத் செய்திருந்தார். 'உன்னை பைஅத் செய்யத் தூண்டியது எது?' என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், 'மாநாட்டின் சூழலும், அஹ்மதிகளின் சகோதரத்துவமும், பரஸ்பர அன்பும்தான் என்னை இதன்பக்கம் ஈர்த்தன' என்று கூறினார்.'

இவ்வாறே, பணியில் இருந்த ஊழியர்களை அவர் பெரிதும் பாராட்டியுள்ளார்.

இவ்வாறே, இந்தோனேசியாவைச் சேர்ந்த ஆர்ச்சி சாஹிப் என்பவர் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய ஜமாஅத்தைச் சாராத தம் கிரேக்க மனைவியுடன் கிரீஸ் நாட்டில் வசிக்கிறார். அவர் கூறுகிறார்:

'அழைப்பு கிடைத்தபோது, இது ஓர் ஆன்மிகப் பயணமாகும்; இது என்னை அல்லாஹ்விற்கு நெருக்கமாக்கும் என்று நினைத்து கிரீஸிலிருந்து இங்கு வந்தேன். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவுகள் என் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின; பணியாளர்கள் செய்த சேவை என் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.'

லாட்வியாவிலிருந்து (Latvia) வந்திருந்த விருந்தினரான நார்முண்டர்சன்ஸ் சாஹிப், அரசியல் அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிரான அக்கிரமங்களும் கொடுமைகளும் அநீதிகளும் என்பதுதான் இவருடைய ஆய்வுக் கட்டுரையாக இருந்தது. இவர் பங்கேற்றிருந்தார். இவர் கூறுகிறார்:

'இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் குறித்து எனக்கு இருந்த கேள்விகள்

அனைத்திற்கும் மாநாட்டின் போது எனக்குப் பதில்கள் கிடைத்துவிட்டன.'

பிறகு கிரீஸ் நாட்டுக் குழுவில் ஒரு பெண் விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்:

'இது மிகவும் அழகிய அனுபவமாக இருந்தது. தன்னார்வலர்களில் ஒவ்வொருவரும் விருந்தினர்களிடம் மிகவும் நட்பாகவும் உதவியாகவும் நடந்துகொண்டனர். கண்காட்சிகள் மிகவும் சிறப்பாக இருந்தன; குறிப்பாக 'ரிவியூ ஆஃப் ரிலிஜன்ஸ்' -ன் இஸ்லாமிய வரலாறு குறித்த கண்காட்சி. அங்கு பல மணிநேரம் செலவிட வேண்டும் என்று நான் விரும்பினேன்.'

தொல்லியல் சின்னங்கள் குறித்துத் தமக்கு விவரிக்கப்பட்டது பற்றிப் பேசிய பிறகு, அனைத்துப் பாராட்டுகளையும் கூறிவிட்டு அவர் கூறுகிறார்:

' எனக்குப் பிடிக்காத ஒரு விஷயமும் உண்டு; அது என்னவென்றால், சில பெண்கள் இஸ்லாமிய ஆடைக் கட்டுப்பாட்டை அதாவது, பர்தாவை சரிவரப் பின்பற்றவில்லை; சில ஆண்களும் பார்வையை கீழ்நோக்கி வைப்பதில் பலவீனத்தைக் காட்டினர்.'

இது குறித்து நான் குறிப்பாக அறிவுறுத்தியிருந்தபோதிலும் இவ்வாறு நடந்துள்ளது. எனவே, இந்த எதிர்மறையான கருத்தையும் நாம் நமது சீர்திருத்தத்திற்காகச் சிந்திக்க வேண்டும்; செவிமடுக்க வேண்டும்.

எனவே, அலட்சியமாக நடந்து கொண்டவர்கள் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், அந்நியர்கள் நம்மை மிகவும் நுணுக்கமான பார்வையுடன் கவனிக்கிறார்கள்; இஸ்லாத்தின் உண்மையான தோற்றத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் எந்தவொரு வாய்ப்பையும் நாம் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. நம் மீது விரல் உயர்த்துவதற்கு காரணியாக அமையும் எந்தவொரு வாய்ப்பையும் அந்நியர்களுக்குக் கொடுக்காதீர்கள்! என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை நான் மாநாட்டின் சொற்பொழிவுகளின்போதும் எடுத்துரைத்திருந்தேன்.

போலந்திலிருந்து வோய்சீக் லெமண்டோவிச் (Wojciech Lemaski) சாஹிப் வந்திருந்தார்.

இவர்களின் பெயர்கள் சற்றே கடினமானவை.

எவ்வாறிருப்பினும், இவர் மனித உரிமைகள் தொடர்பான பேராசிரியராவார்; பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் (Chancellor) இருந்துள்ளார்; சட்டம் கற்பிக்கிறார். அவர் கூறுகிறார்:

' ஏற்பாடுகளைப் பார்த்து மிகவும் ஈர்க்கப்பட்டேன்; ஜமாஅத் இமாமுடனான எனது சந்திப்பு குறித்து எனது உணர்வுகளையும் அனுபவத்தையும் விவரிப்பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. தனிப்பட்ட முறையில் அவர்களிடம் உரையாடியது என்னை மிகவும் கவர்ந்தது.

அவர் கூறுகிறார்: 'நான் இங்கு கற்றுக்கொண்ட விஷயங்களை இப்போது எனது மாணவர்களிடம் கொண்டு சேர்ப்பேன்; இதன் மூலம் அவர்கள் இஸ்லாமியப் போதனைகளின் உண்மையான அர்த்தத்தை அறிந்துகொள்வார்கள்.'

இவை நான் தேர்ந்தெடுத்த சில சம்பவங்கள் ஆகும்; இவற்றிலும் கூட சில சம்பவங்களை மட்டுமே நான் எடுத்துரைத்துள்ளேன்.

இப்போதெல்லாம், பிரஸ் அண்ட் மீடியாவின் பிரஸ் பிரிவின் சார்பாகவும், யு.கே-வின் பிரஸ் சார்பாகவும் அதிக அளவிலான ஊடகக் கவனம் கிடைத்தது. பிரிட்டனின் புகழ்பெற்ற செய்தித்தாளான தி டைம்ஸ் தனது முகப்புப் பக்கத்தில் செய்தியை வெளியிட்டிருந்தது. மற்ற ஊடகங்களின் சார்பாகவும் செய்தி வெளியிடப்பட்டது.

அச்சு ஊடகக் கட்டுரைகளின் எண்ணிக்கை 16 ஆகும்; வாசகர்களின் எண்ணிக்கை ஒரு கோடியாகும். வானொலி நிகழ்ச்சிகள் 35 ஒலிபரப்பாயின; கடந்த ஆண்டை விட 10 அதிகமாகும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 6 ஒளிபரப்பாயின; அதைப் பார்த்தவர்களின் எண்ணிக்கை 72 லட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களில் 5 லட்சத்து 30 ஆயிரம் (Views) பார்வைகள் கிடைத்துள்ளன; யு.கே. பிரிவின் அறிக்கையில் இது கோடிகளிலும் உள்ளது. பிரஸ் அண்ட் மீடியா வாயிலாகச் ஒட்டுமொத்தமாக 5 கோடியே 28 லட்சம் மக்களைச் செய்திகள் சென்றடைந்துள்ளன; 12 வெவ்வேறு செய்தித்தாள்களும் தொலைக்காட்சி அலைவரிசைகளும் இதைச் செய்தியாக வெளியிட்டுள்ளன. இதில் புகழ்பெற்ற தேசிய அலைவரிசைகளும் நாளிதழ்களும் அடங்கும்.

செய்தியாளர்களின் கருத்துகள் குறித்து கூறுகிறேன்; ஒரு பெண் செய்தியாளர் கூறுகிறார்:

' இறுதி நாளன்று உலகளாவிய பைஅத்தைக் கண்ட பிறகு நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளானேன். உணர்ச்சியால் என் கண்கள் நிரம்பின. இது நான் உலகில் இதுவரை கண்டிராத ஒரு காட்சியாகும்; உலகில் வேறு யாராலும் இத்தகைய ஓர் அனுபவத்தையும் நிகழ்வையும் ஏற்பாடு செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை. இந்தக் காட்சி மூச்சை நிறுத்தும் அளவுக்கு (பிரமீப்பூட்டுவதாக) இருந்தது; அது என்னை முழுமையாகத் தன் வசப்படுத்திவிட்டது.'

இவ்வாறே மற்றவர்களின் கருத்துகளும் உள்ளன.

' எம்.டி.ஏ ஆப்பிரிக்கா' (MTA Africa) சார்பாகவும் மிகப்பெரிய அளவில் பணிகள் நடந்து வருகின்றன. 20 செய்தியாளர்கள் இங்கு பங்கேற்றனர்; அவர்கள் 157 அறிக்கைகளை அனுப்பி வைத்தனர். 6 கோடியே 30 லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் வரை மாநாட்டின் செய்திகள் சென்றடைந்தன. ஆப்பிரிக்காவின் 18 -க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஆண்டு மாநாட்டின் நேரலைச் செய்திகளும், சொற்பொழிவுகளும் ஒளிபரப்பப்பட்டன; இந்த ஒளிபரப்பு சுமார் 3 கோடியே 50 லட்சத்திற்கும் அதிகமான மக்களைச் சென்றடைந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்காவில் உள்ள ஜமாஅத்தைச் சாராத பார்வையாளர்களின் கருத்துகளை நான் எடுத்துரைக்கிறேன்;

சியராலியோனின் 'டீண்டாஃபோர்' (Tintafor) கிராமத்தைச் சேர்ந்த பாதிரியார் ஜார்ஜ் என்பவர் கூறுகிறார்:

' நான் தொழிலால் ஓர் ஆசிரியராவேன்; சியராலியோனின் டீண்டாஃபோர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் ஓர் அஹ்மதி முஸ்லிம் அல்ல. பிரிட்டன் ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களின் போதும் என்னை மிகவும் கவர்ந்த விஷயம் என்னவென்றால், அஹ்மதி முஸ்லிம்கள் கிலாஃபத்தின் மீது கொண்டிருக்கும் ஆழமான அன்பும், மனிதகுலம் முழுவதற்கும் - அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி - அவர்கள் வெளிப்படுத்தும் அமைதி, அன்பு, நன்றியுணர்வு மற்றும் மரியாதை ஆகியவைதான்.'

அவர் கூறுகிறார்:

' ஞாயிற்றுக்கிழமையன்று நான் தேவாலயத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது; ஆனால் பள்ளிவாசலுக்குச் சென்று உலகளாவிய பைஅத்தைக் காண்பது என்று நான் முடிவெடுத்தேன். அங்கு நான் கண்ட காட்சி எனது கற்பனைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உலகம் முழுவதும் இவ்வளவு வேகமாக ஏன் பரவி வருகிறது என்பதை இப்போது நான் புரிந்துகொண்டேன்.'

இவ்வாறே பல பாதிரியார்களும், படித்த மக்களும் தங்களின் கருத்துகளை அனுப்பி வைத்துள்ளனர்.

அல்லாஹ் இந்த மாநாட்டின் நல்விளைவுகளை முழு ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மீதும் நிலைநிறுத்துவதோடு, ஏனைய மக்களுக்கும் நேர்வழி காட்டி, அவர்களை உண்மையான இஸ்லாத்தின் பக்கமும் அஹ்மதிய்யத்தின் பக்கமும் ஈர்ப்பானாக!

தமிழாக்கம்
முரப்பி
A.P.A தாரிக் அஹ்மது

* * * * * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி (மல்ஃபூஸாத்)......**

தற்போது மக்கள் பைஅத் செய்கின்றபோது, பார்க்கப்படுவது என்னவென்றால், இன்ன உலகியல் பணி நடந்து விட வேண்டும் என்று அவர்கள் தம்முடன் மறைமுகமான உலகியல் நோக்கங்களையும் எடுத்துக் கொண்டு வருகின்றனர்; இதனால் இன்ன பணி நிகழ்ந்து விட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். உண்மை என்னவென்றால், எவர் நம்பிக்கையாளர் ஆகிவிடுகின்றாரோ பின்னர் அல்லாஹ் ஒவ்வொரு கடினத்தையும் அல்லாஹ் அவருக்கு எளிதாக்கி விடுகின்றான். ஆனால், எல்லாவற்றிற்கும் முதலில் இறை ஞானத்திற்கான அவசியம் உள்ளது. பின்னர் வல்ல இறைவன் சுயமே மனிதனது ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்து விடுவான்.

(மல்பூஸாத் - தொகுதி 5, பக்கம் 222-223)

* * * * * * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 10 - 17 SEP 2026 Issue No. 37& 38

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**1-ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்)......**

ஏனெனில், இந்த வசனம் இறங்கியபோது, அந்நேரத்திலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறை வணக்கம் செய்து கொண்டிருந்தார்கள். எனவே இதன் பொருள் வழக்கத்தை விட அதிகமான இறை வணக்கம் மற்றும் கவனம் என்பதாகும்.

சில அறிவிலிகளான பித்அத் செய்யக் கூடியவர்கள் இந்த வசனத்திற்கு இந்த பொருள் கொடுக்கின்றனர். அதாவது உறுதி ஏற்படாத வரை இறை வணக்கம் கடமையாகும். உறுதி ஏற்பட்டு விட்டால் பின்னர் (தொழுகை) இல்லை. ஏனெனில், அல்லாஹ் கூறுகின்றான்: உறுதி ஏற்படும் வரை இறை வணக்கம் செய்யுங்கள். இவ்வாறு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கின்றனர் என்பதை இந்த அறிவிலிகள் அறிவதில்லை. மேலும், இந்த சூரா இறங்கும் வரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முழுமையான உறுதி ஏற்பட்டிருக்கவில்லை (நவூதுபில்லாஹ்) என்று அவர்கள் ஒருவகையில் கூறுகின்றனர். அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நபித்துவத்திற்குப் பிறகு உறுதி ஏற்பட்டிருக்கவில்லை என்றால் பின்னர் (பித்அத் செய்யக் கூடிய) அந்த இழிவடைந்த மக்களுக்கு உறுதி எப்படி ஏற்பட முடியும்?

نَعُوذُ بِاللّٰهِ مِنْ هٰذِهِ الْخُرَافَاتِ

ஒருமுறை என்னிடம் ஒரு நபர் வந்தார். மேலும், படகில் பயணிப்பவர் கரையை அடைந்து விட்டால் பின்னர் படகிலேயே அமர்ந்து இருக்க வேண்டுமா? அல்லது கீழே இறங்க வேண்டுமா? என்று அவர் கேள்வி கேட்டார். நான் அவரிடம் இவ்வாறு கூறினேன். அதாவது, நதி எல்லைக்குட்பட்டது என்றால், மேலும் அதற்கான கரை இருக்குமென்றால் பின்னர் கரையில் அவர் இறங்கி விட வேண்டும். ஆனால், நதி கரைகளை கடந்தது என்றால், பின்னர் எதனை அவர் கரையாக கருதுகிறாரோ அது அவரது அறிவின் ஏமாற்றமாகும். எனவே அவர் எங்கு இறங்குவாரோ அங்கேயே மூழ்கி விடுவார். அதைக் கேட்டு அவர் வெட்கத்திற்குள்ளானார். (தஃப்ஸீரே கபீர் - தொகுதி 5, பக்கம் 375)

* * * * * * * * * * *

**2-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்)......**

திருக்குர்ஆன் அருளப்படாமலும் இருந்திருந்தால், மேலும், நாம் கண்கூடாக கண்டு கொண்ட அந்த அருட்களை நாம் சுயமே காணாமல் இருந்திருந்தால் பின்னர் அந்த அனைத்து முந்தைய நபிமார்களின் உண்மைத்தன்மை நமக்கு ஐயத்திற்குரியதாக இருந்திருக்கும். திருக்குர்ஆன் நமக்கு அந்த நபிமார்களைப் பற்றிக் கூறியதால் தான் நாம் அவர்களை நம்புகிறோம். திருக்குர்ஆன் மூலமே அவர்களின் உண்மைத்தன்மை வெளிப்பட்டது.

அதாவது, திருக்குர்ஆனின் போதனைகள் முன்னால் இல்லாமல் இருந்திருந்தால், மேலும் எவ்வாறு திருக்குர்ஆன் நமக்கு அந்த நபிமார்களைப் பற்றி நமக்கு கூறியுள்ளதோ அவற்றை நாம் நமது கண்களால் காணாமல் இருந்திருந்தால், இவை கண்களால் காணக் கூடிய விஷயமே ஆகும்; திருக்குர்ஆனில் விரிவாக அவர்களைப் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. எனவே அனைத்து முந்தைய நபிமார்களின் உண்மைத்துவமும் திருக்குர்ஆனைப் படிப்பதன் மூலம் எவ்வாறு நமக்கு வெளிப்பட்டுள்ளதோ அவ்வாறு அந்நிலையில் நமக்கு வெளிப்பட்டிருக்காது.

கூறினார்கள்: ஏனெனில், வெறும் கதைகளால் உண்மைத்துவத்தைப் பெற முடியாது. மேலும், அந்தக் கதைகள் தவறானவையாக இருப்பதற்கும் சாத்தியம் உள்ளது. மேலும் அந்த அனைத்து நபிமார்கள் குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ள அந்த அனைத்து அற்புதங்களும் மிகைப்படுத்தப்பட்டவையாக இருந்திருக்கக் கூடும். ஏனெனில், தற்போது அவர்களின் பெயரும் அடையாளமும் கூட இல்லை. இன்னும் கூறப்போனால், அந்த முந்தைய வேதங்களில் இருந்து இறைவனைக் குறித்து கூட அறிந்து கொள்ள முடிவதில்லை. அந்நிலையில் இறைவனும் மனிதனுடன் உரையாடுகின்றான் என்பதை கூட நிச்சயமாக புரிந்து கொள்ள முடியாது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றியப் பிறகு இந்த அனைத்துக் கதைகளும் உண்மையின் வடிவத்தைப் பெற்று விட்டன. தற்போது நாம் இதனை வெறும் கூற்றாக அல்லாமல், உண்மை நிலையாக நன்றாக புரிந்திருக்கின்றோம். தற்பாது இவை வெறும் கேள்விப்பட்ட கூற்றுகள் அல்ல ; மாறாக, அனுபவத்தால் இந்த விஷயங்கள் நம் முன்னால் வெளிப்பட்டிருக்கின்றன. மேலும் இறை உரையாடல்கள் என்பது என்ன விஷயம்? என்பதையும் நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம். இவை வெறும் கதைகளாக இருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் மூலமாக இந்த விஷயங்கள் அனைத்தும் தெரிய வந்துள்ளன. அதாவது, அல்லாஹ் எவ்வாறு உரையாடுகிறான்?, எவ்வாறு பேசுகிறான்? எவ்வாறு கேட்கிறான்? எவ்வாறு கேட்கச் செய்கிறான்? மேலும் இறைவனின் அடையாளம் எப்படி வெளிப்படுகின்றது? மேலும், எப்படி துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன? போன்ற இந்த விஷயங்கள் அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் மூலமே நாம் கண்டோம். மற்ற சமுதாயங்கள் கதைகளாக எடுத்துரைக்கும் அந்த அனைத்து விஷயங்களையும் நாம் கண்டு விட்டோம். ஆக, நாம் எத்தகைய ஒரு நபியின் கரத்தைப் பிடித்திருக்கின்றோம் என்றால், அவர் இறையடியார் ஆவார்.

ஒரு கவிஞர் மிக அழகாகக் கூறியுள்ளார்:

அரேபிய முஹம்மது (ஸல்) ஈருலகங்களின் அரசர் ஆவார். அவரது வாசலின் தூசிக்கு என் ஆத்மா அர்ப்பணம். அவரை இறைவன் என்று சொல்ல மாட்டேன்; ஆனால் இறைவனைப் பற்றிய அறிவுக்கு அவரே வழிகாட்டி ஆவார்.

எப்படி உலகத்திற்கு சூரியன் இருக்கிறதோ அதேபோன்று நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் சூரியனாக திகழும் அத்தகைய நபியைப் பின்பற்றும் நற்பேறு வழங்கிய அந்த இறைவனுக்கு நாம் எந்த நாவால் நன்றி செலுத்துவோம்! அதாவது, எப்படி நமது உடல் ஆரோக்கியத்திற்காக ஒரு சூரியன் உள்ளதோ அதேபோன்று, நல்லியல்பு படைத்த மக்களின் ஆன்மாவிற்கு புத்துணர்வு ஊட்டுவதற்கு, அவர்களுக்கு ஒளியூட்டுவதற்கு ஒரு சூரியன் உள்ளது. அது இருளின் காலத்தில் தோன்றியது. மேலும்,உலகை தனது ஒளியால் ஒளிமயமாக்கி விட்டது.

அரேபியாவின் அனைத்து பகுதியும் இணை வைத்தலிலிருந்து தூய்மை அடையாத வரை அந்த கதிரவன் சோர்வடையவும் இல்லை. மாங்கவும் இல்லை. அது தனது உண்மைக்கு தானே சான்றாக உள்ளது. ஏனெனில், அதன் ஒளி எல்லாக் காலத்திலும் உள்ளது. மேலும் எப்படி நதியின் தெளிந்த மற்றும் சுத்தமான நீரானது அசுத்தமான ஆடையை சுத்தப்படுத்துகின்றதோ அதுபோன்று அவரை உண்மையாகப் பின்பற்றுவது மனிதனை தூய்மையாக்குகின்றது. உண்மையான உள்ளத்துடன் எம்மிடம் வந்து, அந்த ஒளியைக் காணாதவர் யார் தான் இருக்கிறார்? மேலும், தூய எண்ணத்துடன் அந்தக் கதவை தட்டிய எவருக்கு அந்தக் கதவு திறந்து கொடுக்கப்படவில்லை? ஆனால், வேதனை என்னவென்றால், பெரும்பாலான மனிதர்களின் பழக்கம் இவ்வாறே இருக்கின்றது. அதாவது அவர்கள் கீழான வாழ்வையே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். ஒளி அவர்களினுள் நுழைய வேண்டும் என்பதை அவர்கள் விரும்புவதில்லை.(சஷ்மேயே மஃரிபத் - ரூஹானி கஸாயின் தொகுதி 23, பக்கம் 302, 303, 301) (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் நாளிதழ் - நாள்: 3 செப்டம்பர் 2026) * * * * * *

**National Watch Company**

Sales & Service
B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad